जघान — கொன்றனர். [தால்

विनिपात्य तमेकं तु सौदासः पुरुषर्षभ । विज्वरो विगतामर्षो हतं रक्षो ह्यदैक्षत ॥१४॥

पुरुषर्षभ — "புருஷோத்தம!
सौदासः — சௌதாஸர் (சுதாஸ
ருடைய புத்திரர்
வீரஸஹர்)
तं — அந்த
एकं — ஜதயிலொன்றை
विनिपात्य तु — கொன்றுவீழ்த்திய
பின்னர்
विगतामर्षः — கோபமொழிந்த
வராய்
विज्वरः — அமைதிபெற்றவராய்
हतं — கொலையுண்டு கிடப்
பதை
रक्षः हि — ஓர் அரக்கனது உரு
வமுடையதாயும்
अदैक्षत — கவனித்தார்.

निरीक्षमाणं तं दृष्ट्वा सहायं तस्य रक्षसः । सन्तापमकरोद्घोरं सौदासं चेदमब्रवीत् ॥१५॥

तस्य — "அந்த
राक्षसः — மற்றொரு அரக்கனது
सहायं — துணைவனுக்கு
निरीक्षमाणं — கவனித்துப்பார்த்
துக்கொண்டிருக்கிற
सौदासं — சௌதாஸரை
दृष्ट्वा — பார்த்து
घोरं — தாங்கமுடியாதவண்
ணமாய்
सन्तापं अकरोत् — உள்ளங்கொதித்தது.
तं — அவரைப்பார்த்து
इदं च — இதையும்
अब्रवीत् — புகன்றது:

यस्मादनपराधं त्वं सहायं मम जघ्निवान् । तस्मात्त्वामपि पापिष्ठ प्रदास्यामि प्रतिक्रियाम् ॥

त्वं — "நீ
अनपराधं — ஒரு அபாதமுஞ்
செய்யாத
मम — எனது
सहायं — துணைவனை
जघ्निवान् — கொலைபுரிந்தனை.
यस्मात् तस्मात् — ஆதலால்
पापिष्ठ — ஹே பாபி
तव अपि — உனக்கும்
प्रतिक्रियां — பிரதியபகாரத்தை
प्रदास्यामि — இனிச் செய்தே தீரு
வேன்.'

एवमुक्त्वा तु तद्रक्षस्तत्रैवान्तरधीयत । कालपर्याययोगेन राजा मित्रसहोऽभवत् ॥ १७ ॥

तत्	"அந்த	अन्तरधीयत	அந்தர்த்தானமாயி ஞன்.
रक्षः	அரக்கன்	मित्रसहः	மித்திரஸஹர் (ஸீரஸஹர்)
तु	இதுவிஷயத்தில்	कालपर्याययोगेन	காலக்கிரமத்தில்
एवं	இப்படி	राजा	அரசராக
उक्त्वा	சொல்லிவிட்டு	अभवत्	ஆயினர்.
तत्र	அவ்விடத்தில்		
एव	உடனேயே		

राजा तु यजते यज्ञमस्याश्रमसमीपतः । अश्वमेधं महायज्ञं तं वसिष्ठोऽभ्यपालयत् ॥१८॥

राजा तु	"அரசராய் இருக்கை	तं	அந்த
अस्य	இந்த [யில்	अश्वमेधं	அச்வமேதமென்ற
आश्रमसमीपतः	ஆச்சிரமத்திற்கருகில்	महायज्ञं	மஹாயாகத்தை
यज्ञं	ஒரு யாகத்தை	वसिष्ठः	வஸிஷ்டர்
यजते	இயற்றினர்.	अभ्यपालयत्	நடத்திவைத்தார்.

तत्र यज्ञो महानासीद्बहुवर्षगणायुतः । समृद्धः परया लक्ष्म्या देवयज्ञसमोऽभवत् ॥१९॥

तत्र	"அப்பொழுது	परया	அதிக
यज्ञः	யாகமானது	लक्ष्म्या	செல்வத்தால்
महान्	வெகுப்பெரிதாய்	समृद्धः	செழுமையாய்
बहुवर्षगणायुतः	பல்லாண்டளவு நடை பெற்றதாய்	देवयज्ञसमः	தேவர்களது யாகமோ வென
आसीत्	விளங்கிற்று.	अभवत्	இருந்தது.

अथावसाने यज्ञस्य पूर्ववैरमनुस्मरन् । वसिष्ठरूपी राजानमिति होवाच राक्षसः ॥ २० ॥

राक्षसः	"அரக்கன்	वसिष्ठरूपी ह	வஸிஷ்டமுனிவராக வே வேடம் பூண்டவ னுப்
अथ	அப்பொழுது	राजानं	அரசனருகில்சென்று
यज्ञस्य	யாகத்தின்	इति	இப்படி
अवसाने	முடிவில்	उवाच	புகன்றான்:
पूर्ववैरं	பழைய வைரத்தை		
अनुस्मरन्	எண்ணி		

अस्य यज्ञस्य जातोऽन्तो सामिषं भोजनं मम। दीयतामिह शीघ्रं वै नात्र कार्या विचारणा ॥

अस्य	"'இந்த	सामिषं	மாஸிட ஊன்மிச்சிர
यज्ञस्य	யாகத்திற்கு	भोजनं	உணவானது [மான
अन्तः	ஸமாப்தி	दीयतां	அளிக்கப்படவேண்
जातः	ஏற்பட்டுவிட்டது.	अत्र	இதில் [டும்.
इह	ஆகையால்	विचारणा	முன்பின் ஆலோசனை என்பது
शीघ्रं वै	இப்போதே	न कार्या	செய்யக்கூடாது.'
मम	எனக்கு		

तच्छ्रुत्वा व्याहृतं वाक्यं रक्षसा ब्रह्मरूपिणा । भक्ष्यसंस्कारकुशलमुवाच पृथिवीपतिः ॥

पृथिवीपतिः — "சக்கிரவர்த்தி
ब्रह्मरूपिणा — பிராம்மணவடிவமெடுத்துக்கொண்டிருந்த
रक्षसा — அரக்கனால்
व्याहृतं — சொல்லப்பட்டதாகிய
तत् — அந்த
वाक्यं — வாக்கியத்திற்கு
श्रुत्वा — செவிசாய்த்து
भक्ष्यसंस्कार-कुशलं — சமையல் வேலையில் சமர்த்தனைப் பார்த்து
उवाच — இப்படி நியமித்தருளினார்:

हविष्यं सामिषं स्वादु यथा भवति भोजनम् । तथा कुरुष्व शीघ्रं वै परितुष्येद्यथा गुरुः ॥

गुरुः — "'புரோஹிதர்
परितुष्येत् — திருப்தி அடையவேண்டும்
यथा — என்கிற காரணத்தால்
हविष्यं — நைவேத்யமாகும்
भोजनं — போஜனமானது
स्वादु — ருசியாயிருக்கிறதாயும்
सामिषं — நரமாமிசங்கலந்ததாகவும்
भवति यथा तथा — இருக்கும்படியாய்
शीघ्रं वै — சீக்கிரத்திலேயே
कुरुष्व — சித்தஞ்செய்வாயாக.'

शासनात्पार्थिवेन्द्रस्य सूदः संभ्रान्तमानसः । स राक्षसः पुनस्तत्र सूदवेषमथाकरोत् ॥
स मानुषमथो मांसं पार्थिवाय न्यवेदयत् । इदं स्वादु हविष्यं च सामिषं चान्नमाहृतम् ॥

तत — "அப்பொழுது
संभ्रान्तमानसः — இஷ்டப்படியெல்லாமெங்கும் புகவல்லவனுகிய
सः — அந்த
राक्षसः — அரக்கன்
पुनः — மீளவும்
सूदवेषं — சமையற்காரனுகிய மாறுவேஷத்தை
अकरोत् — பூண்டுகொண்டிருந்தான்.
सः — அந்த
सूदः — சமையற்காரன்
पार्थिवेन्द्रस्य — சக்கிரவர்த்தியினது
अथ — இப்படிப்பட்ட
मानुषं — மானிட
मांसं — மாமிசத்தைப்பற்றியதாகிய
शासनात् — சாஸனத்தைப்பெற்று விட்டிருந்தபடியால்
पार்थिवस्य — அரசனுக்கு இப்பொழுது
अथो — இப்படி
न्यवेदयत् — அறிவித்தான்:
इदं — 'இதோ
हविष्यं — அப்பணத்திற்கு வேண்டிய
अन्नं — போஜனம்
सामिषं च — மானிட ஊன்மிச்ரம் செய்யப்பட்டும்
स्वादु च — ருசியாயிருக்கும் வண்ணமாயும்
आहृतम् — கொண்டுவரப்பட்டிருக்கிறது.'

स भोजनं वसिष्ठाय पत्न्या सार्धमुपाहरत् । मदयन्त्या नरव्याघ्र सामिषं रक्षसा हृतम् ॥

नरव्याघ्र — "ஹே புருஷோத்தம!
सः — அவர்
वसिष्ठाय — வஸிஷ்டருக்கு
रक्षसा — அரக்கனால்
हृतं — கொண்டுவரப்பட்டிருந்த
सामिषं — மானிடமாம்சமிச்ரமாகிய
भोजनं — போஜனத்தை
पत्न्या — பத்தினியான
मदयन्त्या — மதயந்தியுடன்
सार्धं — கூடவே
उपाहरत् — பரிமாறினன்.

ज्ञात्वा तदामिषं विप्रो मानुषं भोजनागतम् । क्रोधेन महताऽऽविष्टो व्याहर्तुमुपचक्रमे ॥

विप्रः	"அந்தணர்	ज्ञात्वा	கண்டு
भोजनागतं	போஜனமாக கிடைத் திருக்கும்	महता	அதிக
		क्रोधेन	கோபத்தால்
तत्	அந்த	आविष्टः	மெய்மறந்தவராகி
मानुषं	மானிட	व्याहर्तुं	இப்படி சபிக்க
आमिषं	ஊனுடனிருப்பதாய்	उपचक्रमे	தலைப்பட்டார்:

यस्मात्त्वं भोजनं राजन्ममैतदातुमिच्छसि । तस्माद्भोजनमेतत्ते भविष्यति न संशयः ॥

राजन्	"'ஹே மன்னனே!	यस्मात् तस्मात्	ஆதலின்
त्वं	நீ	एतत्	இது ஒன்றே
मम	எனக்கு	ते	உனக்கு
एतत् भोजनं	இந்த போஜனத்தை	भोजनं	உணவாய்
दातुं	அளிக்க	भविष्यति	இருக்கக்கடவது.
इच्छसि	எண்ணினாய்.	न संशयः	இதற்கு ஐயமில்லை.'

स राजा सह पत्न्या वै प्रणिपत्य मुहुर्मुहुः । पुनर्वसिष्ठं प्रोवाच यदुक्तं ब्रह्मरूपिणा ॥

सः	"அந்த	पुनः	அதன்மேல்
राजा	மன்னவர்	ब्रह्मरूपिणा	பிராம்மணவேஷம் கொண்டிருந்தவனால்
पत्न्या	மனையாட்டியோடு		
सह वै	கூடவே	उक्तं	நியமிக்கப்பட்டது
वसिष्ठं	வஸிஷ்டரை	यत्	எதுவோ அதை
मुहुः मुहुः	பலதரம்	प्रोवाच	விண்ணப்பம் செய்தார்.
प्रणिपत्य	வணங்கி		

तच्छ्रुत्वा पार्थिवेन्द्रस्य रक्षसा विकृतं च तत् । पुनः प्रोवाच राजानं वसिष्ठः पुरुषर्षभम् ॥

रक्षसा च	"அரக்கனாலேயே	वसिष्ठः	வஸிஷ்டர்
पार्थिवेन्द्रस्य	சக்கிரவர்த்தியா ருக்கு	तत्	அதனால்
		पुनः	மீளவும்
तत्	அந்த	पुरुषर्षभं	புருஷோத்தமரான
विकृतं	அஸம்பாவிதமேற்பட் டிருப்பதை	राजानं	மன்னரைப்பார்த்து
श्रुत्वा	கேட்டறிந்துகொண்டு	प्रोवाच	இப்படித் திருவாய் மலர்ந்தருளினார்:

मया रोषपरीतेन यदिदं व्याहृतं वचः । नैतच्छक्यं वृथा कर्तुं प्रदास्यामि च ते वरम् ॥

रोषपरीतेन	"கோபாவேசத்தில்	वृथा	வீணாக
मया	என்னால் [ருந்த	कर्तुं	செய்ய
इदं वचः	இந்த வாக்கானது	न शक्यं च	முடியாதிருந்தாலும்
व्याहृतं	சொல்லிவிடப்பட்	ते	உனக்கு
यत्	எதுவோ [டது	वरं	ஒரு வரத்தை
एतत्	இது	प्रदास्यामि	அளிக்கின்றேன்.

कालो द्वादश वर्षाणि शापस्यान्तो भविष्यति। मत्प्रसादाच्च राजेन्द्र व्यतीतं न स्मरिष्यसि॥

द्वादश वर्षाणि	"'பன்னீராண்டு	च	அன்றியும்
कालः	முடியவும்	राजेन्द्र	அரசர்க்கரசே,
शापस्य	சாபத்திற்கு	मत्प्रसादात्	என் அனுக்கிரகத்தி
अन्तः	முடிவு	व्यतीतं	நடந்தேறியதை [னல்
भविष्यति	ஏற்படும்;	न स्मरिष्यसि	நீ நினைக்கமாட்டாய்.'

एवं स राजा तं शापमुपभुज्यारिसूदनः। प्रतिलेभे पुना राज्यं प्रजाश्चैवान्वपालयत्॥३३॥

अरिसूदनः	"சத்துருசம்ஹார	उपभुज्य	அனுபவித்துவிட்டு
सः	அந்த [காகிய	पुनः	மீளவும்
राजा	மன்னர்	राज्यं	ராஜ்யபாரத்தை
तं	அந்த	प्रतिलेभे	பெற்றார்.
शापं	சாபத்தை	प्रजाः च एव	பிரஜைகளையும்
एवं	இப்படி	अन्वपालयत्	பரிபாலித்துவந்தார்

तस्य कल्माषपादस्य यज्ञस्यायतनं शुभम्। आश्रमस्य समीपेऽस्य यन्मां पृच्छसि राघव॥

राघव	"ஹே ராகவ, (சத்து	आयतनं	சாலையைப்பற்றி
	ருக்கின)	मां	என்னை
अस्य	அந்த	पृच्छसि	நீ வினவினையோ அது
आश्रमस्य	ஆச்சிரமத்திற்கு	तस्य	அந்த
समीपे	ஸமீபத்தில்	कल्माषपादस्य	கல்மாஷபாதரென இன்னொரு பெயர் பூண்ட வீரஸஹ ருடையது."
यत्	எந்த		
शुभं	அழகுவாய்ந்த		
यज्ञस्य	யாக		

तस्य तां पार्थिवेन्द्रस्य कथां श्रुत्वा सुदारुणाम्। विवेश पर्णशालायां महर्षिमभिवाद्य च॥

तस्य	அந்த	श्रुत्वा	செவிசாய்த்து
पार्थिवेन्द्रस्य	சக்கிரவர்த்தியினது	च	அதன்மேல்
सुदारुणां	அதிமனோவேதனை	महर्षिं	மஹரிஷியை
	யைத்தருகிறதாகிய	अभिवाद्य	பணிந்து
तां	அந்த	पर्णशालायां	பர்ணசாலைக்குள்
कथां	கதைக்கு	विवेश	புகுந்தார்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
उत्तरकाण्डे पञ्चषष्टितमः सर्गः॥

आदितः श्लोकाः 22983 **उत्तरकाण्डे आदितः श्लोकाः 2259**

षट्षष्टितमः सर्गः—அறுபத்தாறுவது ஸர்க்கம். ॥ ६६ ॥

कुशलवोत्पत्तिः—குசலவர்களது உற்பத்தி.

यामेव रात्रिं शत्रुघ्नः पर्णशालामुपाविशत् । तामेव रात्रिं सीताऽपि प्रसूता दारकद्वयम् ॥

शत्रुघ्नः	சத்துருக்கினர்	तां एव	அதே
यां एव	எந்த ஒரு	रात्रिं	இரவில்
रात्रिं	இரவில்	सीता अपि	சீதாபிராட்டியாரும்
पर्णशालां	பர்ணசாலையில்	दारकद्वयं	இரட்டை ஆண்பிள்
उपाविशत्	தங்கியிருந்தனரோ;	प्रसूता	பெற்றார். [ளைகளை

ततोऽर्धरात्रसमये बालका मुनिदारकाः । वाल्मीकेः प्रियमाचख्युः सीतायाः प्रसवं शुभम् ॥

ततः	அப்பொழுது	सीतायाः	சீதாபிராட்டியாரது
अर्धरात्रसमये	அர்த்தராத்திரியில்	शुभं प्रसवं	ஸுகபிரஸவமாகிற
मुनिदारकाः	முனிகுமாரர்களாகிய	प्रियं	நல்ல செய்தியை
बालकाः	சிடர்கள்	आचख्युः	இப்படித் தெரிவித்
वाल्मीकेः	வால்மீகி முனிவருக்கு		தார்கள்.

भगवन्रामपत्नी सा प्रसूता दारकद्वयम् । ततो रक्षां महातेजः कुरु भूतविनाशिनीम् ॥३॥

महातेजः	"மஹாதேஜஸ்வியாகிய	प्रसूता	பெற்றனர்.
		ततः	ஆதலால்
भगवन्	ஹே பகவன்!	भूतविनाशिनीं	பேய்பிசாசுகளுக்கு விஞ்சகரமாகிய
सा	அந்த	रक्षां	ரக்ஷாபந்தனத்தை
रामपत्नी	ஸ்ரீராமபிரானது தருமபத்னியார்	कुरु	தேவரீர் செய்யத் திருவுள்ளங்கொள்ள வேண்டும்."
दारकद्वयं	இரட்டை ஆண்பிள் ளைகளை		

तेषां तद्वचनं श्रुत्वा महर्षिः समुपागमत् । जगाम तत्र हृष्टात्मा ददर्श च कुमारकौ ॥
भूतघ्नीं चाकरोत्ताभ्यां रक्षां रक्षोविनाशिनीम् ॥ ४ ॥

महर्षिः	மஹரிஷி	हृष्टात्मा	உள்ளம் பூரித்தவராய்
तेषां	அவர்களுடைய	ददर्श	கண்குளிரக்கடாக்ஷித் தருளினர்.
तत्	அந்த		
वचनं	விண்ணப்பத்திற்கு	ताभ्यां च	அவ்விருவர்களுக்கும்
श्रुत्वा	திருச்செவிசாய்த்து	भूतघ्नीं	பேய்பிசாசுகளை ஒழிக் கிறதாயும்
समुपागमत्	அங்ஙனமே செய்வதாய் ஒப்புக்கொண் டார்.	रक्षोविनाशिनीं	ரக்ஷஸ்களுக்கு விஞ்சகரமுமாகிய
तत्र	அவ்விடத்திற்கு	रक्षां	ரக்ஷாபந்தத்தை
जगाम	எழுந்தருளினர்.	अकरोत्	செய்தருளினர்.
कुमारकौ च	இரு ராஜகுமாரர் களையும்		

कुशमुष्टिमुपादाय लवं चैव तु स द्विजः। वाल्मीकिः प्रददौ ताभ्यां रक्षां भूतविनाशिनीम्॥

सः द्विजः	அந்த அந்தணராகிய
वाल्मीकिः	வால்மீகிமுனிவர்
तु	அப்பொழுது
कुशमुष्टिं च	ஒரு முடி அளவு தர்ப்பையின் நுனிப்பாகத்தையும்
लवं एव	அவ்வளவே தர்ப்பையின் அடிப்பாகத்தையும்
उपादाय	கையிலெடுத்து
ताभ्यां	அவ்விரண்டிற்கும்
भूतविनाशिनीं	பேய்பிசாசங்களுக்கு விநாசகரமாகிய
रक्षां	ரக்ஷாபந்தனத்தை
प्रददौ	இப்படிச்சொல்லிக் கொடுத்தார்.

यस्तयोः पूर्वजो जातः स कुशैर्मन्त्रसत्कृतैः। निर्मार्जनीयस्तु तदा कुश इत्यस्य नाम तत्॥

तदा	"அப்பொழுது
तयोः	அவ்விருவர்களில்
पूर्वजः	மூத்தவனும்
जातः	பிறந்தவன்
यः	எவனே
सः तु	அவன்தான்
मन्त्रसत्कृतैः	மந்திரங்களால் ஜபிக்கப்பட்ட
कुशैः	நுனித்தர்ப்பைகளால்
निर्मार्जनीयः	துடைக்கப்படவேண்டும்.
तत्	அக்காரணத்தால்
अस्य	இவனுக்கு
कुशः इति	குசன் என்கிற
नाम	பெயரிருக்கட்டும்.

यश्चावरो भवेत्ताभ्यां लवेन स समाहितः। निर्मार्जनीयो वृद्धाभिर्लव इत्येव नामतः॥

ताभ्यां	"அவ்விருவர்களில்
यः	எந்த
समाहितः	புண்யாத்மா
अवरः भवेत्	இளையவனே
सः	அவன்
वृद्धाभिः	கிழவிகளால்
लवेन	அடித்தர்ப்பையால்
निर्मार्जनीयः	துடைக்கப்படட்டும்.
च	ஆகையால்
लवः	லவன்
इति एव	என்கிறதையே
नामतः	பெயராய் பெறட்டும்.

एवं कुशलवौ नाम्ना तावुभौ यमजातकौ। मत्कृताभ्यां च नामभ्यां ख्यातियुक्तौ भविष्यतः॥

यमजातकौ	"இரட்டையாய்ப் பிறந்த
तौ	அந்த
उभौ	இருவர்களும்
एवं	இப்படியே
कुशलवौ	குசன் லவன் என
नाम्ना	பெயர்பூண்டவர்களாய்
मत्कृताभ्यां	என்னுலிடப்பட்ட
नामभ्यां च	பெயர்களைக்கொண்டே
ख्यातियुक्तौ	பிரசித்திபெற்றவர்க
भविष्यतः	வாழ்வார்கள்." [ளாய்

तां रक्षां जगृहुस्ताश्च मुनिहस्तात्समाहिताः। अकुर्वंश्च ततो रक्षां तयोर्विगतकल्मषाः॥

विगतकल्मषाः	தோஷரஹிதைகளா
ताः	அந்த ஸ்த்ரீகள் [கிய
मुनिहस्तात्	முனிவரது கையி
तां	அந்த [னின்று
रक्षां	ரக்ஷையை
जगृहुः	கையேந்தி வாங்கிக் கொண்டனர்:
ततः	அதன்மேல்
समाहिताः च	ஆஸக்தியுடையவர்களாகவே
रक्षां	ரக்ஷாபந்தத்தை
तयोः च	அவ்விருவர்களுக்கும்
अकुर्वन्	செய்தார்கள்.

तथा तां क्रियमाणां च रक्षां गोत्रं च नाम च। सङ्कीर्तनं च रामस्य सीतायाः प्रसवौ शुभौ॥
अर्धरात्रे तु शत्रुघ्नः शुश्राव सुमहत्प्रियम्। पर्णशालां ततो गत्वा मातर्दिष्ट्येति चाब्रवीत्॥

शत्रुघ्नः	சத்ருக்ஞர்
अर्धरात्रे	நடுநிசியில்
सीतायाः	ஸீதாப்பிராட்டியாருடைய
शुभौ प्रसवौ तु	பெற்ற இரு புண்யாத்மாக்கள் விஷயத்தில்
तथा	அப்படி
क्रियमाणां	செய்யப்படுகின்ற
तां	அந்த
रक्षां च	ரக்ஷாபந்தனத்தையும்
रामस्य	ஸ்ரீராமருடைய
नाम च	பெயர் ஒன்றையே
गोत्रं च	ஸர்வ பாக்கியமாயும்
सुमहत्	மிக்க
प्रियं च	இனிமையாகவும்
सङ्कीर्तनं	திருப்பித்திருப்பிச் சொல்லப்படுவதையும்
शुश्राव	கேட்டார்.
ततः	அதன்மேல்
पर्णशालां	பர்ணசாலைக்குள்
गत्वा	சென்று
मातः	'ஹே ஸர்வலோக மாதாவே'
इति च	என்றழைத்தும்
दिष्ट्या	'நான் இன்று இங்கிருக்க அந்தப் பாக்கியம் பெற்றேன்'
अब्रवीत्	என்று சொன்னார்.

तथा तस्य प्रहृष्टस्य शत्रुघ्नस्य महात्मनः। व्यतीता वार्षिकी रात्रिः श्रावणी लघुविक्रमा॥

तथा	அப்படியாய்
प्रहृष्टस्य	சந்தோஷமாயிருந்த
तस्य	அந்த
महात्मनः	மஹாத்மாவாகிய
शत्रुघ्नस्य	சத்ருக்னருக்கு
वार्षिकी	மாரிகாலத்தியதும்
श्रावणी	ஆவணிமாதத்தியதும்
लघुविक्रमा	அஹோராத்ரைவிடக் குறைந்த நாழிகையுள்ளதுமாகிய
रात्रिः	இரவு
व्यतीता	கழிந்தது.

प्रभाते सुमहावीर्यः कृत्वा पौर्वाह्णिकीं क्रियाम्।
मुनिं प्राञ्जलिरामन्त्र्य ययौ पश्चान्मुखः पुनः ॥ १३ ॥

सुमहावीर्यः	பெயர்பெற்ற வீர்யவானுகிய அவர்
प्रभाते	விடியற்காலையில்
पौर्वाह्णिकीं	உதயத்தில் செய்ய வேண்டிய
क्रियां	வைதிகக் காரியத்தை
कृत्वा	செய்துவிட்டு
मुनिं	முனிவரிடம்
प्राञ्जलिः	அஞ்சலிஹஸ்தராய்
आमन्त्र्य	போகவிடைபெற்றுக்
पुनः	அதன்மேல் [கொண்டு
पश्चान्मुखः	மேற்குமுகமாய்
ययौ	எழுந்தருளினர்.

स गत्वा यमुनातीरं सप्तरात्रोषितः पथि। ऋषीणां पुण्यकर्तीनामाश्रमे वासमभ्ययात्॥

सः	அவர்
पथि	வழியில்
सप्तरात्रोषितः	ஏழு இரவுகள் தாமதித்ததாய்
यमुनातीरं	யமுனைதீரத்திற்கு
गत्वा	போய்ச்சேர்ந்து
पुण्यकीर्तीनां	மிகப் பிரசித்திபெற்ற புண்யாத்மாக்களான
ऋषीणां	ரிஷிகளுடைய
आश्रमे	ஆச்ரமத்தில்
वासं अभ्ययात्	வஸிக்கலானார்.

स तत्र मुनिभिः सार्धं भार्गवप्रमुखैर्नृपः । कथाभिरभिरूपाभिर्वासं चक्रे महायशाः ॥१५॥

सः	அந்த	मुनिभिः	முனிவர்களுடனே
महायशाः	மஹா யசஸ்வியான	सार्धं	கூடி
नृपः	மன்னர்	अभिरूपाभिः	மனோஹரமான
तत्र	அவ்விடத்தில்	कथा भः	கதைகளைக்கேட்டுக்
भार्गवप्रमुखैः	பார்க்கவரைத் தலை		கொண்டு
	மையாகவுடைய	वासं चक्रे	வாசஞ்செய்தார்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकिये आदिकाव्ये
उत्तरकाण्डे षट्षष्टितमः सर्गः ॥

आदितः श्लोकाः 22998 उत्तरकाण्डे आदितः श्लोकाः 2274

सप्तषष्टितमः सर्गः—அறுபத்தேழாவது ஸர்க்கம். ॥ ६७ ॥

मान्धातृवधः—மாந்தாதாவைக் கொன்றது.

अथ रात्र्यां प्रवृत्तायां शत्रुघ्नो भृगुनन्दनम् । पप्रच्छ च्यवनं विप्रं लवणस्य यथा बलम् ॥
शूलस्य च बलं ब्रह्मन्के च पूर्वं विनाशिताः । अनेन शूलमुख्येन द्वन्द्वयुद्धमुपागताः ॥२॥

अथ	அப்பொழுது	यथा	இப்படி
रात्र्यां	முதலிரவு	पप्रच्छ	விஞவினர்.
प्रवृत्तायां	நடைபெறுகையில்	ब्रह्मन्	"ஹே முனிவர் பெரு
शत्रुघ्नः	சத்துருக்கினர்		மானே!
भृगुनन्दनं	பிருகுவின் புதல்வ	पूर्वं	இதற்குமுன்
च्यवनं	ச்யவன [ரான	द्वन्द्वयुद्धं	துவந்த்வயுத்தத்
विप्रं	முனிவரைப்பார்த்து		திற்கு
लवणस्य	லவணனுடைய	उपागताः	வந்தவர்களும்
बलं	சாமர்த்தியத்தைப்	अनेन	இந்த
	பற்றியும்	शूलमुख्येन	சூலச்ரேஷ்டத்தால்
शूलस्य बलं च	சூலத்தின் வலிமை	विनाशिताः च	வதையுண்டவர்களும்
	யைப்பற்றியும்	के	யாவர்?"

तस्य तद्वचनं श्रुत्वा शत्रुघ्नस्य महात्मनः । प्रत्युवाच महातेजाश्च्यवनो रघुनन्दनम् ॥ ३ ॥

महातेजाः	மஹாதேஜஸ்வியாகிய	श्रुत्वा	செவிசாய்த்து
च्यवनः	ச்வன முனிவர்	रघुनन्दनं	ரகுநந்தனருக்கு (சத்
तस्य	அந்த		ருக்கினருக்கு)
महात्मनः	மஹாத்மாவான	प्रत्युवाच	இப்படி பதில் சொல்
शत्रुघ्नस्य	சத்துருக்கினருடைய		லியருளினர்:
तद् वचनं	அந்த வாக்குக்கு		

असङ्ख्येयानि कर्माणि यान्यस्य रघुनन्दन। इक्ष्वाकुवंशप्रभवे यद्वृत्तं तच्छृणुष्व मे ॥ ४ ॥

रघुनन्दन	"ஹே ரகுநந்தன!
अस्य	அவனது
कर्माणि	ஸாஹஸச்செய்கைகள்
यानि	எவைகளோ அவைகளை
असंख्येयानि	கணக்கிட்டுக் கூறமுடியாது.
इक्ष्वाकुवंशप्रभवे	இக்ஷ்வாகுவம்சத்தொருவர் விஷயத்தில்
यत्	எது
वृत्तं	நடந்ததோ
तत्	அதை
मे शृणुष्व	நான் கூறுகின்றேன் கேளும்.

अयोध्यायां पुरा राजा युवनाश्वसुतो बली। मान्धातेति स विख्यातस्त्रिषु लोकेषु वीर्यवान्॥

पुरा	"பூர்வம்
अयोध्यायां	அயோத்தியில்
मान्धाता	மாந்தாதா
इति	என்னும்
राजा	ஓர் அரசர் இருந்தார்.
सः	அவர்
युवनाश्वसुतः	யுவனச்வரென்பவரின் புத்திரர்.
बली	அதிசாமர்த்தியசாலி.
वीर्यवान्	வீர்யவானென
त्रिषु	மூன்று
लोकेषु	உலகங்களிலும்
विख्यातः	புகழ்பெற்றவர்.

स कृत्वा पृथिवीं कृत्स्नां शासने पृथिवीपतिः। सुरलोकमितो जेतुमुद्योगमकरोन्नृपः ॥

सः नृपः	"அந்த மன்னர்
पृथिवीं	மண்ணுலகம்
कृत्स्नां	அனைத்தையும்
शासने	ஆக்கினையில்
कृत्वा	நிறுத்தி
पृथिवीपतिः	பூலோகசக்கிரவர்த்தியாகி
इतः	இம்மண்ணுலகை விட்டு
सुरलोकं	தேவலோகத்தை
जेतुं	வெற்றிகொள்ள
उद्योगं	யத்தனத்தை
अकरोत्	செய்யலானர்.

इन्द्रस्य च भयं तीव्रं सुराणां च महात्मनाम्। मान्धातरि कृतोद्योगे देवलोकजिगीषया॥

देवलोकजिगीषया	"தேவலோகத்தை வெற்றிகொள்ள எண்ணங்கொண்டதால்
मान्धातरि	மாந்தாதா
कृतोद्योगे	யத்தனித்தவளவில்
इन्द्रस्य च	இந்திரனுக்கும்
महात्मनां	மஹாத்மாக்களான
सुराणां च	தேவர்களுக்கும்
तीव्रं	அதிக
भयम्	மனக்கவலை ஏற்பட்டது.

अर्धासनेन शक्रस्य राज्यार्धेन च पार्थिवः। वन्ध्यमानः सुरगणैः प्रतिज्ञामधिरोहत ॥ ८ ॥

शक्रस्य	"இந்திரனுடைய
अर्धासनेन	அர்த்தாசனத்தினும்
राज्यार्धेन च	அரசாட்சியின் பாதியாலும்
सुरगणैः	தேவகணங்களால்
वन्ध्यमानः	வணங்கப்படும்
पार्थिवः	மன்னனாகுவேன் என்கிற
प्रतिज्ञां	பாத்யதையை
अधिरोहत	கொடுக்கலாயினன்.

तस्य पापमभिप्रायं विदित्वा पाकशासनः। सान्त्वपूर्वमिदं वाक्यमुवाच युवनाश्वजम् ॥९॥

पाकशासनः	"தேவேந்திரர்	युवनाश्वजं	யுவனுச்வர் புத்திரரிடம்
तस्य	அவனது	सान्त्वपूर्वं	நல்வார்த்தையாய்
अभिप्रायं	உத்தேசமான	इदं	இனிவரும்
पापं	தீயச்செயலை	वाक्यं	மொழியை
विदित्वा	அறிந்து	उवाच	சொன்னர் :

राजा त्वं मानुषे लोके न तावत्पुरुषर्षभ। अकृत्वा पृथिवीं वश्यां देवराज्यमिहेच्छसि ॥

पुरुषर्षभ	"'ஹே புருஷோத்தம!	वश्यां	வசப்படுத்திக் கொள்கிறதை
त्वं	நீ	अकृत्वा	மூடிக்காமல்
मानुषे	மானிட	इह	இப்பொழுதே
लोके	உலகில்	देवराज्यं	தேவலோகஸாம்ராஜ்யத்திற்கு
तावत्	இன்னும்	इच्छसि	ஆசைப்படுக்கின்றனையே.
राजा	பிரபுவாக		
न	ஆகவில்லை.		
पृथिवीं	பூமியை		

यदि वीर समग्रा ते मेदिनी निखिला वशे। देवराज्यं कुरुष्वेह सभृत्यबलवाहनः॥११॥

वीर	"'ஹே வீர!	सभृत्यबलवाहनः	பிருத்தியர்கள், சேனைகள், வாஹனங்கள் இவைகளோடுகூடினவனுய்
ते वशे	உனது வசத்தில்		
मेदिनी	பூலோகம்		
निखिला	பாக்கியின்றி		
समग्रा	முழுமையும்	देवराज्यं	தேவலோக அரசாட்சியை
यदि	இருக்குமானல்		
इह	அப்பொழுது	कुरुष्व	நீ செலுத்தலாகும்.'

इन्द्रमेवं ब्रुवाणं तं मान्धाता वाक्यमब्रवीत्। क्व मे शक्र प्रतिहतं शासनं पृथिवीतले॥१२॥

मान्धाता	"மாந்தாதா	अब्रवीत्	மொழிந்தார் :
एवं	இவ்வண்ணம்	शक्र	'ஹே தேவேந்திர!
ब्रुवाणं	உரைக்கும்	पृथिवीतले	பூலோகத்தில்
तं	அந்த	मे शासनं	எனது ஆக்ஞை
इन्द्रं	இந்திரனைப்பார்த்து	प्रतिहतं	செல்லாத இடம்
वाक्यं	இந்தமொழியை	क्व	எங்கு உள்ளது?'

तमुवाच सहस्राक्षो लवणो नाम राक्षसः। मधुपुत्रो मधुवने न चाज्ञां कुरुतेऽनघ ॥१३॥

सहस्राक्षः	"தேவேந்திரர்	लवणः	லவணன்
तं	அவருக்கு	नाम	என்ற
उवाच	இப்படி பதிலுரைத்தார் :	राक्षसः	அரக்கன்
अनघ	'பாபமற்றவனே!	आज्ञां	கட்டளைக்கு
मधुवने	மதுவனத்தில்	न कुरुते च	கீழ்ப்படிந்து நடக்கவில்லையே.'
मधुपुत्रः	மதுவென்பவனது புத்திரனை		

तच्छ्रुत्वा विप्रियं घोरं सहस्राक्षेण भाषितम्। व्रीडितोऽवाङ्मुखो राजा व्याहर्तुं न शशाक ह॥

राजा	"மன்னவர்
सहस्राक्षेण	தேவேந்திரரால்
भाषितं	சொல்லப்பட்ட
तत्	அந்த
घोरं	மிக்க
विप्रियं	அஸஹ்யமான செய்தியை
श्रुत्वा	கேட்டு
अवाङ्मुखः	தலைகுனிந்து
व्रीडितः	வெட்கி
व्याहर्तुं ह	வாயைத்திறந்து பேசவும்
न शशाक	முடியவில்லை.

आमन्त्र्य तु सहस्राक्षं ह्रिया किञ्चिदवाङ्मुखः। पुनरेवागमच्छ्रीमानिमं लोकं नरेश्वरः॥

श्रीमान्	"சிமானுன
नरेश्वरः	மன்னர்
ह्रिया	வெட்கத்தினுல்
अवाङ्मुखः	தலைகுனிந்தவராய்
तु	இருந்ததாலும்
सहस्राक्षं	இந்திரனிடம்
किञ्चित्	ஒருவிதமாய்
आमन्त्र्य	விடைபெற்று
पुनः एव	மீளவும்
इमं	அந்த
लोकं	உலகத்திற்கு
आगमत्	வந்துசேர்ந்தார்.

स कृत्वा हृदयेऽमर्षं सभृत्यबलवाहनः। आजगाम मधोः पुत्रं वशे कर्तुमरिन्दमः॥१६॥

अरिन्दमः	"சத்துருஸம்ஹாரகராகிய
सः	அவர்
हृदये	மனதில்
अमर्षं	உத்தேசித்ததை முடிக்கவேண்டும் என்ற தீர்மானத்தை
कृत्वा	செய்துகொண்டு
सभृत्यबलवाहनः	பிருத்தியர்கள், சேனைகள், வாஹனங்கள் இவைகளோடு கூடினவராய்
वशे	ஆளுகைக்குள்
कर्तुं	கொண்டுவர
मधोः	மதுவினது [திற்கு
पुत्रं	புத்திரனிருக்குமிடத்-
आजगाम	வந்துசேர்ந்தார்.

स काङ्क्षमाणो लवणं युद्धाय पुरुषर्षभः। दूतं सम्प्रेषयामास सकाशं लवणस्य हि॥१७॥

लवणं	"லவணனை
युद्धाय हि	போருக்காகவே
काङ्क्षमाणः	எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும்
सः	அந்த
पुरुषर्षभः	புருஷோத்தமர்
लवणस्य	லவணனுடைய
सकाशं	சமூகத்திற்கு
दूतं	ஒரு தூதனை
संप्रेषयामास	அனுப்பினர்.

स गत्वा विप्रियाण्याह बहूनि मधुनः सुतम्। वदन्तमेवं तं दूतं भक्षयामास राक्षसः॥

सः	"அவன்
मधुनः सुतं	மதுவினது புதல்வனி-
गत्वा	டம் போய்ச்சேர்ந்து [அதிக
बहूनि	மனைபீஷ்டத்திற்கு
विप्रियाणि	மாறுன விஷயங்களை
आह	தூதுசொல்லிவிட்டு
राक्षसः	அரக்கன் [தான்.
एवं वदन्तं	இப்படிப் பேசிய
तं दूतं	அந்தத் தூதனை
भक्षयामास	புசித்துவிட்டான்.

चिरायमाणे दूते तु राजा क्रोधसमन्वितः । अर्दयामास तद्रक्षः शरवृष्ट्या समन्ततः ॥

राजा	"மன்னர்
दूते	தூதன்
चिरायमाणे तु	திரும்பிவராததால்
क्रोधसमन्वितः	மிக்க கோபங்கொண்டவராய்
तत्	அந்த
रक्षः	அரக்கனை
शरवृष्ट्या	அம்புமாரியால்
समन्ततः	நாற்புறமும்
अर्दयामास	துன்புறுத்தினர்.

ततः प्रहस्य तद्रक्षः शूलं जग्राह पाणिना । वधाय सानुबन्धस्य मुमोचायुधमुत्तमम् ॥२०॥

तत्	"அந்த
रक्षः	அரக்கன்
ततः	அப்போது
प्रहस्य	நகைத்து
शूलं	சூலத்தை
पाणिना	கையில்
जग्राह	எடுத்துக்கொண்டான்.
सानुबन्धस्य	தீங்குசெய்துகொண்டிருப்பவருடைய
वधाय	வதையின்பொருட்டு
उत्तमं	உத்தம
आयुधं	ஆயுதத்தை
मुमोच	விடுத்தான்.

तच्छूलं दीप्यमानं तु सभृत्यबलवाहनम् । भस्मीकृत्वा नृपं भूयो लवणस्यागमत्करम् ॥

तत्	"அந்த
शूलं	சூலம்
तु	உடனே
दीप्यमानं	கொழுந்துவிட்டு எரிகிறதாகி
सभृत्यबल-वाहनं	பிருத்தியர்கள், சேனைகள் வாஹனங்கள் இவைகளோடுகூட
नृपं	மன்னரை
भस्मीकृत्वा	சாம்பலாய் எரித்துவிட்டு
भूयः	மீளவும்
लवणस्य	லவணனுடைய
करं	கையில்
आगमत्	வந்து சேர்ந்தது.

एवं स राजा सुमहान्हतः सबलवाहनः । शूलस्य तु बलं सौम्य अप्रमेयमनुत्तमम् ॥२२॥

सुमहान्	"மஹாபலிஷ்டனெனப்பெயர்பெற்ற
सः	அந்த
राजा	மன்னர்
सबलवाहनः तु	சேனைகளுடனும் வாஹனங்களுடனும்
एवं	இப்படி
हतः	கொல்லப்பட்டார்.
सौम्य	ஹே ஸௌமிய,
शूलस्य	சூலத்தினது
बलं	உக்கிரமானது
अनुत्तमं	ஒப்புயர்வில்லாதது.
अप्रमेयम्	எதையும் செய்யவல்லது.

श्वः प्रभाते तु लवणं वधिष्यसि न संशयः । अगृहीतायुधं क्षिप्रं ध्रुवो हि विजयस्तव ॥
लोकानां स्वस्ति चैव स्यात्कृते कर्मणि च त्वया ॥ २३ ॥

तु	"இப்படி இருந்த போதிலும்
श्वः	நாளை
प्रभाते	காலையில்
लवणं	லவணனை
अगृहीतायुधं	கையில் ஆயுதமில்லா திருக்கிறவனுய்
क्षिप्रं	அப்போதே
वधिष्यसि	நீ கொன்றுவிடுவாய்.
न संशयः	இதற்கையமில்லை.
तव	உனது
विजयः	வெற்றியும்
ध्रुवः हि	எவர்க்கும் அசைக்க வும் முடியாதே.
त्वया	உன்னல்
कर्मणि	பெரிய காரியம்
कृते च	செய்துமுடிக்கப் பட்டதும்
लोकानां च एव	எல்லா லோகங்களுக்
स्वस्ति	நன்மை [கும்
स्यात्	விளைவித்ததாகும்."

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
उत्तरकाण्डे सप्तषष्टितमः सर्गः ॥

आदितः श्लोकाः 23021 उत्तरकाण्डे आदितः श्लोकाः 2297

अष्टषष्टितमः सर्गः—அறுபத்தெட்டாவது ஸர்க்கம். ॥ ६८ ॥

लवणशत्रुघ्नविवादः—லவணசத்ருக்னர்களது விவாதம்.

कथां कथयतां तेषां जयं चाकाङ्क्षतां शुभम् । व्यतीता रजनी शीघ्रं शत्रुघ्नस्य महात्मनः ॥

महात्मनः	மஹாத்மாவான
शत्रुघ्नस्य	சத்துருக்கினருக்கு
रजनी	இராப்பொழுது
शुभं	நன்மைசெய்யும்
जयं च	ஜயமொன்றையே
आकांक्षतां	ஸதா விஷயமாய்க் கொண்ட
कथां	ஸம்பாஷணையை
तेषां	அவர்கள்
कथयतां	சொல்லிக்கொண் டிருக்கையில்
शीघ्रं	பொழுதுதெரியாத வண்ணம்
व्यतीता	கழிந்தது.

ततः प्रभाते विमले क्रूरकर्मा स राक्षसः । निर्गतस्तु पुराद्धीरो भक्ष्याहारप्रचोदितः ॥२॥

ततः	அப்பொழுது
विमले	தெளிவான
प्रभाते	சூரியோதயமானதும்
क्रूरकर्मा	துன்மார்க்கனும்
धीरः	தீரனுமாகிய
सः	அந்த
राक्षसः तु	அரக்கனும்
भक्ष्याहार-प्रचोदितः	உணவுதேட ஆவல் கொண்டவனுகி
पुरात्	வீட்டிலிருந்து
निर्गतः	வெளியேபோயிருந் ந்தான்.

एतस्मिन्नन्तरे वीरः शत्रुघ्नो यमुनां नदीम् । तीर्त्वा मधुपुरद्वारि धनुष्पाणिरतिष्ठत ॥३॥

एतस्मिन् अन्तरे	இதேசமயத்தில்
वीरः	வீராகிய
शत्रुघ्नः	சத்துருக்கினர்
यमुनां नदीं	யமுனுநதியை
तीर्त्वा	தாண்டி
मधुपुरद्वारि	மதுவினது வீட்டு வாயிலில்
धनुष्पाणिः	வில்லும் கையுமாக
अतिष्ठत	காத்துக்கொண் டிருந்தார்.

ततोऽर्धदिवसे प्राप्ते कृतकर्मा स राक्षसः । आगच्छद्बहुसाहस्रं प्राणिनां भारमुद्वहन् ॥४॥

अर्धदिवसे	நடுப்பகல்	बहुसाहस्रं	அனேகாயிரம்
प्राप्ते	நடைபெறுகையில்	प्राणिनां	பிராணிகளுடைய
कृतकर्मा	போனகாரியத்தை முடித்துக்கொண்ட	भारं	மூட்டைய
		उद्वहन्	சுமந்துகொண்டு
सः	அந்த	ततः	அவ்விடத்திற்கு
राक्षसः	அரக்கன்	आगच्छत्	திரும்பிவந்தான்.

ततो ददर्श शत्रुघ्नं स्थितं द्वारि धृतायुधम् । तमुवाच ततो रक्षः किमनेन करिष्यसि ॥५॥

ततः	அப்பொழுது	रक्षः	அரக்கன்
शत्रुघ्नं	சத்துருக்கினரை	तं	அவரைப் பார்த்து
द्वारि	வாயிலில்	उवाच	இப்படிப் புகன்றான் :
धृतायुधं	ஆயுதபாணியாக	अनेन	" இதனால்
स्थितं	நின்றுகொண்டிருப்	करिष्यसि	நீ செய்யப்போகிறது
ददर्श	கண்டான். [பதை	किम्	என்ன ?
ततः	அதன்மேல்		

ईदृशानां सहस्राणि सायुधानां नराधम । भक्षितानि मया रोषात्कालमाकाङ्क्षसे नु किम्॥

नराधम	" மானிடப்பதரே !	भक्षितानि	விழுங்கிவிடப்பட் டிருக்கிறார்கள்.
मया	என்		
रोषात्	ஆக்கிரஹத்தால்	कालं	யமனிடம்
ईदृशानां	இத்தன்மையான	आकांक्षसे	போய்ச்சேர நிச்சயித் துவிட்டாயா
सायुधानां	ஆயுதபாணிகளான		
सहस्राणि	பலர்	किं नु	என்ன ?

आहारश्चाप्यसम्पूर्णो ममायं पुरुषाधम । स्वयं प्रविष्टोऽद्य मुखं कथं यास्यसि दुर्मते ॥७॥

पुरुषाधम	" மானிடப்புழுவே !	दुर्मते	ஹே மூட !
मम अपि	எனக்கோ	अद्य	இப்பொழுது
अयं	இப்பொழுது	स्वयं	நீதானுகவே
आहारः च	ஆஹாரமும்	मुखं प्रविष्टः	வாயில்விழ
असंपूर्णः	ஸம்பூர்ணமாகக் கிடை ककவில்லை.	कथं	ஏன்
		यास्यसि	வந்திருக்கின்றனை ? "

तस्यैवं भाषमाणस्य हसतश्च मुहुर्मुहुः । शत्रुघ्नो वीर्यसम्पन्नो रोषादश्रूण्यवासृजत् ॥ ८ ॥

वीर्यसम्पन्नः	வீரசிகாமணியான	एवं	இப்படி
शत्रुघ्नः	சத்துருக்கினர்	भाषमाणस्य च	பேசியபொழுது
मुहुःमुहुः	அடிக்கடி	रोषात्	ரோஷத்தால்
तस्य	அவன்	अश्रूणि	கண்ணீரை
हसतः	ஏளனம்பண்ணுகிற வனுய்	अवासृजत्	பெருக்கினர்.

तस्य रोषाभिभूतस्य शत्रुघ्नस्य महात्मनः । तेजोमया मरीच्यस्तु सर्वगात्रैर्विनिष्पतन् ॥९॥

रोषाभिभूतस्य — கோபாவேசங்கொண்ட
महात्मनः — மஹாத்மாவான
तस्य — அந்த
शत्रुघ्नस्य — சத்துருக்கினரது
सर्वगात्रैः तु — ஸகல அவயவங்களி லிருந்தும்
तेजोमयाः — மானிட சரீரமாயிருக்கையிலும் சோதிமயமான
मरीच्यः — கிரணங்கள்
विनिष्पतन् — வெளிப்பட்டன.

उवाच च सुसंक्रुद्धः शत्रुघ्नस्तं निशाचरम् । योद्धुमिच्छामि दुर्बुद्धे द्वन्द्वयुद्धं त्वया सह ॥

सुसंक्रुद्धः — அதிசிற்றங்கொண்டிருந்த
शत्रुघ्नः — சத்துருக்கினர்
तं — அந்த
निशाचरं — அரக்கனைப்பார்த்து
उवाच — இப்படி உரைத்தார்:
दुर्बुद्धे — "ஹே துஷ்டா!
त्वया सह — உன்னுடன்
द्वन्द्वयुद्धं च — தொந்தயுத்தத்தையே
योद्धुं — செய்யும்
इच्छामि — தீர்மானத்துடன் நான் வந்திருக்கிறேன்.

पुत्रो दशरथस्याहं भ्राता रामस्य धीमतः । शत्रुघ्नो नित्यशत्रुघ्नो वधाकाङ्क्षी तवागतः ॥

नित्यशत्रुघ्नः — "எப்பொழுதும் சத்ருக்களை சம்ஹாரம் செய்யும்
शत्रुघ्नः — சத்ருக்னனெனப்
अहं — நான் [பெயர்பூண்ட
दशरथस्य — தசரதரின்
पुत्रः — புதல்வன்.
धीमतः — தீமானுன
रामस्य — ஸ்ரீராமபிரானது
भ्राता — சோதரன்.
तव — உன்னுடைய
वधाकांक्षी — வதையை உத்தேசமாய்க்கொண்டு
आगतः — நான் வந்திருக்கிறேன்.

तस्य मे युद्धकामस्य द्वन्द्वयुद्धं प्रदीयताम् । शत्रुस्त्वं सर्वभूतानां न मे जीवन्गमिष्यसि ॥

युद्धकामस्य — "அமராட ஆவல்
तस्य — அந்த [கொண்ட
मे — எனக்கு
द्वन्द्वयुद्धं — தொந்தயுத்தத்திற்கு
प्रदीयतां — இணங்கிவிடவேண்டியது.
त्वं — நீ
सर्वभूतानां — ஸகலபிராணிகளுக்கும்
शत्रुः — சத்ருவாயிருக்கின்ற
मे — என்னிடமிருந்து [னை.
जीवन् — உயிருடன்
न गमिष्यसि — நீ திரும்பிப்போக முடியாது":

तस्मिंस्तथा ब्रुवाणे तु राक्षसः प्रहसन्निव । प्रत्युवाच नरश्रेष्ठं दिष्ट्या प्राप्तोऽसि दुर्मते ॥

तथा — அவ்விதமாக
तस्मिन् — அவர்
ब्रुवाणे तु — பேசியபொழுது
राक्षसः — அரக்கன்
प्रहसन् इव — திரஸ்காரம் செய்துகொண்டே
नरश्रेष्ठं — புருஷோத்தமரைப் பார்த்து
प्रत्युवाच — இப்படிப் பதிலுரைத்தான்:
दुर्मते — "ஹே மூடா! [
दिष्ट्या — தெய்வாதீனமாக
प्राप्तः असि — நீ இங்கு வந்து சேர்ந்தனை.

मम मातृष्वसुर्भ्राता रावणो राक्षसाधिपः। हतो रामेण दुर्बुद्धे स्त्रीहेतोः पुरुषाधम ॥१४॥

दुर्बुद्धे "ஹே மூடா!
पुरुषाधम ஹே மானிடப்பதரே!
राक्षसाधिपः ராக்ஷஸமன்னரும்
मम எனக்கு
मातृष्वसुः தாய்வழியாக
भ्राता ஆப்தபந்துவுமாகிய
रावणः ராவணனுர்
स्त्रीहेतोः ஒருபெண்நிமித்தமாக
रामेण ராமனென்பவனால்
हतः கொல்லப்பட்டார்.

तच्च सर्वं मया क्षान्तं रावणस्य कुलक्षयम्। अवज्ञां पुरतः कृत्वा मया यूयं विशेषतः ॥

रावणस्य "ராவணரது
कुलक्षयं குல அழிவாகிய
तत् அது
सर्वं च எல்லாமும்
मया என்னால்
क्षान्तं மன்னித்துவிடப் பட்டது.
पुरतः அதன்மேல்
यूयं विशेषतः முக்கியமாய் நீங்கள் என்கிறதினு [லேயே
मया என்னால்
अवज्ञां அலக்ஷியமாய்
कृत्वा இருந்துவிடப்பட் டது.

निहताश्च हि मे सर्वे परिभूतास्तृणं यथा। भूताश्चैव भविष्याश्च यूयं च पुरुषाधमाः ॥

यूयं च "நீங்களாகும்
पुरुषाधमाः च மானிடப்பதர்களும்
भूताः च एव தெய்வ ஸங்கல்ப்பத் தாலுண்டான சேத னங்கள் அசேதனங் களெல்லாமும்
तृणं यथा அற்பமென
परिभूताः விட்டுவிடப்பட்டிருக் கிறார்கள்.
भविष्याः கண்முன்கிட்டியவர்
सर्वे च எல்லோருமே [கள்
मे निहताः என்னால் கொன்றுவி டப்பட்டார்கள்.
हि இது பிரசித்தம்.

तस्य ते युद्धकामस्य युद्धं दास्यामि दुर्मते। तिष्ठ त्वं च मुहूर्तं तु यावदायुधमानये ॥
ईप्सितं यादृशं तुभ्यं सज्जये यावदायुधम् ॥ १७ ॥

दुर्मते "ஹே மூடா!
युद्धकामस्य யுத்தத்திற்காக வந்தி ருக்கும்
तस्य அந்த
ते உன்னுடன்
युद्धं அமராடுவதற்கு
दास्यामि நான் இணங்குகி றேன்.
आयुधं ஆயுதத்தை
मुहूर्तं तु ஒரு நொடியிலேயே
आनये இதோ எடுத்துக் கொண்டுவந்துவிடுகி றேன்.
त्वं நீ
यावत् च அதுவரையில்மாத் [திரம்
तिष्ठ பொறுத்திரு.
यावत् அதற்குள்
तुभ्यं உனக்கு
ईप्सितं இஷ்டமாயிருக்கிற
आयुधं ஆயுதம்
यादृशं எதுவாகிறதோ அதை
सज्जये நீ கைப்பற்று.

तमुवाचाथ शत्रुघ्नः क्व मे जीवन्गमिष्यसि । शत्रुर्यदृच्छया दृष्टो न मोक्तव्यः कृतात्मना ॥

शत्रुघ्नः	சத்துருக்கினர்	कृतात्मना	புத்திசாலியான ஒரு வனால்
अथ	அதன்மேல்	यदृच्छया	தற்செயலாய்
तं	அவனைப்பார்த்து	दृष्टः	கண்முன் அகப் பட்டுக்கொண்ட
उवाच	இப்படிப் பேசினர்:	शत्रुः	சத்துரு
मे	"என்னைத்தாண்டி	न मोक्तव्यः	தப்பி ஓடிவிடச்செய் யக்கூடாது.
जीवन्	உயிரோடு		
गमिष्यसि	நீ திரும்பிப்போய்விடு		
क्व	எப்படியாகும்? [வது		

यो हि विक्लबया बुद्ध्या प्रसरं शत्रवे ददौ । स हतो मन्दबुद्धित्वाद्यथा कापुरुषस्तथा ॥

कापुरुषः	"பயங்காளி	प्रसरं ददौ	அவனிஷ்டப்படி வேறி டம் செல்லவிடுகிறான்.
यः	எவனே அவன்		
मन्दबुद्धित्वात्	மூடபுத்தியால்	यथा तथा	அப்படியாகில்
विक्लबया बुद्ध्या	அசட்டுத்தனத்தினு	सः हि	அவனே
शत्रवे	சத்துருவுக்கு [லும்	हतः	மாண்டுபோகிறான்"

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकिये आदिकाव्ये
उत्तरकाण्डे अष्टषष्टितमः सर्गः ॥

आदितः श्लोकाः 23040 उत्तरकाण्डे आदितः श्लोकाः 2316



एकोनसप्ततितमः सर्गः—அறுபத்தோன்பதாவது ஸர்க்கம். ॥ ६९ ॥

लवणवधः—லவணவதம்.

तच्छ्रुत्वा भाषितं तस्य शत्रुघ्नस्य महात्मनः । क्रोधमाहारयत्तीव्रं तिष्ठ तिष्ठेति चाब्रवीत् ॥

तस्य	அந்த	तीव्रं	அடக்கமுடியாத
महात्मनः	மஹாத்மாவான	क्रोधं	கோபத்திற்கு
शत्रुघ्नस्य	சத்துருக்கினரின்	आहारयत्	ஆளானன்.
तत्	அந்த	तिष्ठ तिष्ठ	நில் நில்
भाषितं	சொல்லை	इति च	என்று மாத்திரம்
श्रुत्वा	கேட்டு	अब्रवीत्	சொன்னன்.

पाणौ पाणिं विनिष्पिष्य दन्तान्कटकटाप्य च । लवणो रघुशार्दूलमाह्वयामास चासकृत् ॥

लवणः	லவணசுரன்	दन्तान्	பற்களை
असकृत्	பலதரம்	कटकटाप्य च	கடகடவெனக் கடித்
पाणौ	கையில்	रघुशार्दूलं	ரகுசார்தூலரை [தும்
पाणिं	கையை	आह्वयामास	போருக்கு அழைத் தான்.
विनिष्पिष्य च	போட்டு அறைக்தும்		

तमाह्वयन्तं सौमित्रिर्लवणं घोरदर्शनम् । शत्रुघ्नो देवशत्रुघ्न इदं वचनमब्रवीत् ॥ ३ ॥

सौमित्रिः	சுமித்திரா தேவியின் புதல்வரும்
देवशत्रुघ्नः	தேவசத்துருக்களின் ஸம்ஹாரகருமாகிய
शत्रुघ्नः	சத்துருக்கினர்
घोरदर्शनं	கோரரூபியாய்
आह्वयन्तं	போருக்கழைக்கின்ற
तं	அந்த
लवणं	லவணனைப்பார்த்து
इदं	இனிவருமாறு
वचनं	வசனத்தை
अब्रवीत्	சொன்னர்.

न शत्रुघ्नस्तथा जातो यथाऽन्ये निर्जितास्त्वया । तदद्य बाणाभिहतो व्रज त्वं यमसादनम् ॥

अन्ये	"சாதாரண மனிதர்
त्वया	உன்னால் [கள்
निर्जिताः	தோற்கடிக்கப்பட் டார்கள்.
यथा तथा	என்றாலும் அப்பொ ழுது
शत्रुघ्नः	சத்துருக்கினனென்ற நான்
न जातः	பிறந்திருக்கவில்லை.
तत्	ஆகையால்
अद्य	இப்பொழுது
त्वं	நீ
बाणाभिहतः	பாணத்தாலடியுண்டு
यमसादनं	யமனுலகுக்கு
व्रज	போய்ச்சேர்.

ऋषयोऽप्यद्य पापात्मन्मया त्वां निहतं रणे । पश्यन्तु विप्रा विद्वांसस्त्रिदशा इव रावणम् ॥

पापात्मन्	"ஹே பாபி!
अद्य	இப்பொழுது
मया	என்னால்
रणे	போரில்
निहतं	கொலையுண்ட
त्वां	உன்னை,
त्रिदशाः	விண்ணவர்கள்
रावणं इव	ராவணனை எப்படி யோ அப்படியே,
ऋषयः	ரிஷிகளும்
विद्वांसः	வித்வாம்சர்களாகிய
विप्राः अपि	அந்தணர்களும்
पश्यन्तु	பார்த்துக் களிப் படையட்டும்.

त्वयि मद्बाणनिर्दग्धे पतितेऽद्य निशाचर । पुरे जनपदे चापि क्षेममेव भविष्यति ॥ ६ ॥

निशाचर	"ஹே நிசாசர!
अद्य	இப்பொழுது
त्वयि	நீ
मद्बाणनिर्दग्धे	என்பாணத்தாலெரி யுண்டு
पतिते	மாண்டுவீழவும்
पुरे च	நகரத்திலும்
जनपदे अपि	நாட்டிலும்
क्षेमं एव	க்ஷேமம்
भविष्यति	உண்டாகப்போகிறது.

अद्य मद्बाहुनिष्क्रान्तः शरो वज्रनिभाननः । प्रवेक्ष्यते ते हृदयं पद्मंशुरिवार्कजः ॥ ७ ॥

अर्कजः	"சூரியனிடமுண்டா கிய
अंशुः	கிரணம்
पद्मं	தாமரைமலரில்
इव	எவ்வண்ணமோ அவ்வண்ணமே
अद्य	இப்பொழுது
मद्बाहुनिष्क्रान्तः	எனது கையினின்று கிளம்பிவரும்
वज्रनिभाननः	வஜ்ராயுதம்போன்ற கூருடைய
शरः	சரமானது
ते	உனது
हृदयं	இருதயத்தில்
प्रवेक्ष्यते	புகப்போகிறது."

एवमुक्तो महावृक्षं लवणः क्रोधमूर्च्छितः । शत्रुघ्नोरसि चिक्षेप स च तं शतधाऽच्छिनत् ॥

एवं	இப்படியாய்	शत्रुघ्नोरसि	சத்துருக்கினருடைய மார்பில்
उक्तः	சொல்லப்பட்டதைக் கேட்ட	चिक्षेप	விடுத்தனன்.
लवणः	லவணன்	सः च	அவரோ
क्रोधमूर्च्छितः	கோபம் தலைக்கேறிய வனுகி	तं	அதை
महावृक्षं	மிகப்பெரிய மரமொன்றை	शतधा	பலதுண்டுகளாய்
		अच्छिनत्	பிளந்துதள்ளி விட்டார்.

तद्दृष्ट्वा विफलं कर्म राक्षसः पुनरेव तु । पादपान्सुबहून्गृह्य शत्रुघ्नायासृजद्बली ॥ ९ ॥

बली	அதிபலிஷ்டனுகிய	तु	இருந்தாலும்
राक्षसः	அரக்கன்	पुनः एव	மீளவும்
तत्	அந்த	सुबहून् पादपान्	பல விருக்ஷங்களை
कर्म	செய்த காரியத்தை	गृह्य	கையால் பெயர்த்தெடுத்து
विफलं	நிஷ்ப்ரயோஜனமாகி விட்டதாய்	शत्रुघ्नाय	சத்துருக்கினன்மீது
दृष्ट्वा	கவனித்து	असृजत्	தாக்கினன்.

शत्रुघ्नश्चापि तेजस्वी वृक्षानापततो बहून् । त्रिभिश्चतुर्भिरेकैकं चिच्छेद नतपर्वभिः ॥१०॥

तेजस्वी	மஹா சாமர்த்திய சாலியாகிய	त्रिभिः	மூன்று
शत्रुघ्नः अपि	சத்துருக்கினரும்	चतुर्भिः	நான்கு
आपततः	மேலேவந்து விழுந்து கொண்டிருக்கும்	नतपर्वभिः	வளைந்த கணுக்கள் தடையாய் இசைக்கப்பெற்ற பகழிகளால்
बहून् वृक्षान् च	பல மரங்களையும்		
एकैकं	ஒவ்வொன்றாய்	चिच्छेद	சேதித்துத்தள்ளினர்.

ततो बाणमयं वर्षं व्यसृजद्राक्षसोरसि । शत्रुघ्नो वीर्यसम्पन्नो विव्यथे न स राक्षसः ॥

वीर्यसम्पन्नः	வீரசிகாமணியாகிய	व्यसृजत्	பொழிந்தார்.
शत्रुघ्नः	சத்துருக்கினர்	ततः	அப்படியும்
राक्षसोरसि	அரக்கனது மார்பில்	सः	அந்த
बाणमयं	அம்புமயமான	राक्षसः	அரக்கன்
वर्षं	மாரியை	न विव्यथे	சற்றும் சலிக்கவில்லை.

ततः प्रहस्य लवणो वृक्षमुत्पाट्य वीर्यवान् । शिरस्यभ्यहनच्छूरं सस्ताङ्गः स मुमोह वै ॥

वीर्यवान्	வீரியவானுகிய	शिरसि	தலையில்
लवणः	லவணன்	अभ्यहनत्	புடைத்தான்.
प्रहस्य	நகைத்து	ततः	அதனால்
वृक्षं	ஒரு மரத்தை	सः वै	அவரும்
उत्पाट्य	பெயர்த்தெடுத்து	सस्ताङ्गः	அங்கந்தளர்ந்து
शूरं	சூரரை	मुमोह	மூர்ச்சை அடைந்தார்.

तस्मिन्निपतिते वीरे हाहाकारो महानभूत् । ऋषीणां देवसङ्घानां गन्धर्वाप्सरसां तथा ॥

तस्मिन्	அந்த
वीरे	வீரர்
निपतिते	கீழேவிழுந்துவிடவும்
ऋषीणां	ரிஷிகளுடையவும்
देवसङ्घानां	தேவக்கூட்டங்களுடையவும்
गन्धर्वाप्सरसां तथा	கந்தர்வர்களுடையவும் அப்ஸரஸுகளுடையவும்
महान्	ஒரு பெரிய
हाहाकारः	ஹாஹா என்று அழும்கூக்குரல்
अभूत्	உண்டாயிற்று.

तमवज्ञाय तु हतं शत्रुघ्नं भुवि पातितम् । रक्षो लब्धान्तरमपि न विवेश स्वमालयम् ॥
नापि शूलं प्रजग्राह तं दृष्ट्वा भुवि पातितम् । ततो हत इति ज्ञात्वा तान्भक्षान्समुदावहत् ॥

रक्षः	அரக்கன்
हतं	அடியுண்டு
भुवि	தரையில்
पातितं	வீழ்ந்து படுத்துக் [கிடக்கும்
तं	அந்த
शत्रुघ्नं	சத்துருக்கினரை
अवज्ञाय तु	ஒரு பொருட்டாய் கொள்ளாததால்
लब्धान्तरं अपि	தக்க அவகாசம் கிடைத்திருக்கையிலும்கூட
शूलं	சூலத்தை
न प्रजग्राह	கைக்கொள்ளவில்லை.
स्वं आलयं अपि	தனது வீட்டிற் குள்ளேகூட
न विवेश	புகவில்லை.
ततः	இன்னொருதரம்
भुवि	தரையில்
पातितं	படுத்திருக்கும்
तं	அவரை
दृष्ट्वा	உற்றுப்பார்த்து
हतः	இறந்துவிட்டார்
इति	என்று
ज्ञात्वा	நிச்சயித்துக்கொண்டு
तान्	அந்த
भक्षान्	உணவுகளை
समुदावहत्	தூக்கிச்சுமந்து கொண்டான்.

मुहूर्तालब्धसंज्ञस्तु पुनस्तस्थौ धृतायुधः । शत्रुघ्नो वै पुरद्वारि ऋषिभिः सम्प्रपूजितः ॥

ऋषिभिः वै	ரிஷிகளாலும்
तु	இதுவிஷயத்தில்
संप्रपूजितः	ஏற்றவரென ஏற்றுக் கொள்ளப்பட்டவ
शत्रुघ्नः	சத்துருக்கினர் [ரான
मुहूर्तात्	ஒரு முகூர்த்தகாலத் தில்
लब्धसंज्ञः	தன்னறிவுபெற்றவ ராய்
पुनः	மீளவும்
धृतायुधः	ஆயுதபாணியாகி
पुरद्वारि	வீட்டின்வாயிலில்
तस्थौ	மறித்துநின்றுவிட் டார்.

ततो दिव्यममोघं तं जग्राह शरमुत्तमम् । ज्वलन्तं तेजसा घोरं पूरयन्तं दिशो दश ॥१७॥
वज्राननं वज्रवेगं मेरुमन्दरसन्निभम् । नतं पर्वसु सर्वेषु संयुगेष्वपराजितम् ॥ १८ ॥
असृक्चन्दनदिग्धाङ्गं चारुपत्रं पतत्रिणम् । दानवेन्द्राचलेन्द्राणामसुराणां च दारणम् ॥

ततः	அப்பொழுது
असृक्चन्दन-दिग्धाङ्गं	அங்கமெல்லாம் சிவப்புசந்தனம் பூசபெற்றதும்
चारुपत्रं	அழகிய பக்ஷங்கள் கட்டப்பட்ட
पतत्रिणं	பாணமாயும்
वज्राननं	வஜ்ராயுதத்திற்கொப் பானகூர்மையுடை யதும்
वज्रवेगं	வஜ்ராயுதத்திற்கொப் பான ஆற்றலுடை யதும்
मेरुमन्दरसन्निभं	மேருமலை மந்தரமலை இவைகளுக்கொப் பானதும்
सर्वेषु पर्वसु	எல்லா கணுக்களிலும்
नतं	வளைத்து தட்டை யாய் இசைக்கப்பட் டுள்ளதும்
संयुगेषु	யுத்தங்களில்
अराजितं	அஜேயமானதும்
दानवेन्द्रा-चलेन्द्राणां	தானவேந்திரர்களாகி ய பருவத ராஜாக் களுக்கும்
असुराणां च	அஸுரர்களுக்கும்
दारणं	உருவழிக்கவல்லதும்
उत्तमं	உத்கிருஷ்டமாய்
अमोघं	வீண்போகாததாய்
दिव्यं	தெய்வத்தன்மை கொண்டதாய்
घोरं	போற்றிவணங்கத்தக் கதுமான
तं	அந்த
शरं	அம்பை
तेजसा	சோதியால்
दश	பத்து
दिशः	திசைகளிலும்
पूज्यन्तं	பரவியதாய்
ज्वलन्तं	ஜாஜ்வல்யமாய் ஜ்வலி க்கும்படியாய்
जग्राह	கையிலெடுத்தார்.

तं दीप्तमिव कालाग्निं युगान्ते समुपस्थिते । दृष्ट्वा सर्वाणि भूतानि परित्रासमुपागमन् ॥

भूतानि	உயிர்கள்
सर्वाणि	எல்லாமும்
तं	அதை
युगान्ते	ஒரு யுகத்தின் முடிவு
समुपस्थिते	வருகையில்
कालाग्निं इव	காலாக்னியென
दीप्तं	ஜ்வலித்துக்கொண் டிருக்கிறதாய்
दृष्ट्वा	கண்ணுற்று
परित्रासं	ஏக்கத்தை
उपागमन्	அடைந்தார்கள்.

सदेवासुरगन्धर्वं मुनिभिः साप्सरोगणम् । जगद्धि सर्वमस्वस्थं पितामहमुपस्थितम् ॥२१॥

जगत्	உலகம்
सर्वं	எல்லாமும்
अस्वस्थं	நெஞ்சம் தடுமாறி யதாகி
सदेवासुर-गन्धर्वं	தேவர்கள், அஸுரர் கள், கந்தர்வர்கள் இவர்களோடும்
साप्सरोगणं	அப்ஸரகணங்களோ டும்
मुनिभिः हि	முனிவர்களோடும்
पितामहं	பிரம்மதேவரிடம்
उपस्थितम्	போய்ச்சேர்ந்தது.

उवाच देवदेवेशं वरदं प्रपितामहम् । कच्चिल्लोकक्षयो देव सम्प्राप्तो वा युगक्षयः ॥ २२ ॥

देवदेवेशं	தேவதேவேசரென்ற
वरदं	வரதான
प्रपितामहं	பிரம்மதேவரைப் பார்த்து
उवाच	அவர்கள் இப்படி விண்ணப்பஞ்செய்தார்கள்:
देव	"ஹே ஸ்வாமி!
लोकक्षयः	உலகமழியுங்காலமா ?
वा	அல்லது
युगक्षयः	யுகப்ரளயகாலம்
संप्राप्तः	வந்துவிட்டதா
कच्चित्	என்ன ?

नेदृशं दृष्टपूर्वं च न श्रुतं प्रपितामह । देवानां भयसम्मोहो लोकानां संक्षयं प्रति ॥ २३ ॥

प्रपितामह	"ஹே பிரம்மதேவரே!
ईदृशं	இப்படிப்பட்டது
दृष्टपूर्वं न	இதுகாலம் கண்டதுமில்லை.
श्रुतं च न	கேட்டதுமில்லை.
लोकानां	உலகங்களுக்கு
संक्षयं	நாசகாலமாயிருப்பதை
प्रति	உத்தேசித்து
देवानां	தேவர்களுக்கு
भयसम्मोहः	யாதும்தோற்றாது ஏக்கம்பிடித்துவிட்டது."

तेषां तद्वचनं श्रुत्वा ब्रह्मा लोकपितामहः । भयकारणमाचष्ट देवानामभयङ्करः ॥
उवाच मधुरां वाणीं शृणुध्वं सर्वदेवताः ॥ २४ ॥

देवानां	தேவர்களுக்கு
अभयङ्करः	அபயமளிக்கும்
लोकपितामहः	லோகபிதாமஹராகிய
ब्रह्मा	பிரம்மதேவர்
तेषां	அவர்களுடைய
तत् वचनं	அந்த விண்ணப்பத்திற்கு
श्रुत्वा	திருச்செவிசாய்த்து
भयकारणं	பயத்தின் ஹேதுவை
आचष्ट	ஞானதிருஷ்டியால் கண்டுகொண்டார்.
मधुरां	மதுர
वाणीं	வாக்காக
उवाच	இந்தப் பதிலை திருவாய்மலர்ந்தருளினார்:
सर्वदेवताः	"ஸகல தேவர்காள்!
शृणुध्वम्	சொல்லுகின்றேன் செவிக்கொள்க.

वधाय लवणस्याजौ शरः शत्रुघ्नधारितः । तेजसा तस्य सम्मूढाः सर्वे स्म सुरसत्तमाः ॥

लवणस्य	"லவணுசரனது
वधाय	கொலைநிமித்தமாய்
आजौ	விட்டெறிகிற உத்தேசத்தில்
शरः	ஒரு சரமானது
शत्रुघ्नधारितः	சத்ருக்னனுல்கையிலெடுக்கப்பட்டிருக்கிறது.
तस्य	அதன்
तेजसा	சோதியால்
सुरसत्तमाः	தேவோத்தமர்கள்
सर्वे	எல்லோரும்
सम्मूढाः स्म	ஏக்கமாயிருக்கிறார்கள்.

एष पूर्वस्य देवस्य लोककर्तुः सनातनः। शरस्तेजोमयो वत्सा येन वै भयमागतम्॥२६॥

वत्साः	"ஹே வத்ஸர்களே!	लोककर्तुः	லோககர்த்தாவுமாகிய
एषः	இந்த	देवस्य	பரமாத்மாவினுடை யது.
तेजोमयः	தேஜோமயமான தும்		
सनातनः	பழமையான துமான	येन वै	இதனால்தான்
शरः	சரம்	भयं	பயம்
पूर्वस्य	எதற்கும் முந்தியிருந் தவரும்	आगतम्	ஏற்பட்டது.

एष वै कैटभस्यार्थे मधुनश्च महाशरः। सृष्टो महात्मना तेन वधार्थे दैत्ययोस्तयोः॥२७॥

तेन	"அந்த	दैत्ययोः	அரக்கர்களாகிய
महात्मना	பரமாத்மாவினால்	कैटभस्य	கைடபனென்பவனு டையவும்
एषः	இந்த		
महाशरः	மஹாசரமானது	मधुनः च	மதுவென்பவனுடைய [வும்
अर्थे वै	உத்தேசத்தில்	वधार्थे	வதைக்காக
तयोः	அவ்விரண்டு	सृष्टः	டைக்கப்பட்டது.

एक एव प्रजानाति विष्णुस्तेजोमयं शरम्। एषा एव तनुः पूर्वा विष्णोस्तस्य महात्मनः॥

विष्णुः	"விஷ்ணுபகவான்	एषा	இது
एकः एव	ஒருவர்மாத்திரம்	पूर्वा	பூர்வத்தில்
तेजोमयं	தேஜோமயமாகிய	तस्य	அந்த
शरं	சரத்தை	महात्मनः	பரமாத்மாவாகிய
प्रजानाति	உள்ளபடி அறிவார்.	विष्णोः	விஷ்ணுபகவானது
		तनुः एव	சரீரமாயிருந்தது.

इतो गच्छत पश्यध्वं वध्यमानं महात्मना। रामानुजेन वीरेण लवणं राक्षसोत्तमम्॥२९॥

इतः	"இவ்விடமிருந்து	रामानुजेन	சத்துருக்கினரால்
गच्छत	அவ்விடம் செல்லுங் கள்.	राक्षसोत्तमं	ராக்ஷஸத்தலிவனுகிய
		लवणं	லவணை
महात्मना	மஹாத்மாவும்	वध्यमानं	வதைக்கப்படுகிறதை
वीरेण	வீரருமாகிய	पश्यध्वम्	நேரில் பாருங்கள்."

तस्य ते देवदेवस्य निशम्य वचनं सुराः। आजग्मुर्यत्र युध्येते शत्रुघ्नलवणावुभौ॥३०॥

ते	அந்த	उभौ	இருவர்களாகிய
सुराः	தேவர்கள்	शत्रुघ्नलवणौ	சத்துருக்கினரும் லவணரும்
तस्य	அந்த	युध्येते	சமர்புரிவது
देवदेवस्य	பிரம்மதேவரது	यत्र	எவ்விடத்திலோ அவ்விடத்திற்கு
वचनं	வசனத்தை	आजग्मुः	வந்துசேர்ந்தார்கள்,
निशम्य	கேட்டு,		

तं शरं दिव्यसङ्काशं शत्रुघ्नकरधारितम् । ददृशुः सर्वभूतानि युगान्ताग्निमिवोत्थितम् ॥

सर्वभूतानि — எல்லா உயிர்களும்
शत्रुघ्नकरधारितं — சத்துருக்கினனது கையிலிருக்கிறதும்
दिव्यसङ्काशं — ஜோதிமயமாய் விளங்குகிறதும்
युगान्ताग्निं — பிரளயகாலாக்னியை
इव — போலவே
उत्थितं — ஜொலித்துக்கொண்டிருக்கிறதுமான
तं शरं — அந்த சரத்தை
ददृशुः — பார்த்தார்கள்.

आकाशमावृतं दृष्ट्वा देवैर्हि रघुनन्दनः । सिंहनादं भृशं कृत्वा ददर्श लवणं पुनः ॥३२॥

रघुनन्दनः — சத்துருக்கினர்
देवैः हि — தேவர்களாலேயே
आकाशं — ஆகாசத்தை
आवृतं — இடைவெளியின்றி நிரம்பியிருக்கிறதாய்
दृष्ट्वा — கவனித்து
भृशं — உரக்க
सिंहनादं कृत्वा — ஒரு சிங்கநாதத்தைச் [செய்து
पुनः — மீண்டும்
लवणं — லவணனை
ददर्श — விழித்துப்பார்த்தார்.

आहूतश्च पुनस्तेन शत्रुघ्नेन महात्मना । लवणः क्रोधसंयुक्तो युद्धाय समुपस्थितः ॥३३॥

तेन — அந்த
महात्मना — மஹாத்மாவான
शत्रुघ्नेन — சத்துருக்கினனால்
आहूतः — அழைக்கப்பட்ட
लवणः — லவணன்
क्रोधसंयुक्तः — கோபமதிகரித்தவ
पुनः — மீளவும் [னாகி
युद्धाय च — யுத்தத்திற்கே
समुपस्थितः — எதிர்த்துவந்தான்.

आकर्णात्स विकृष्याथ तद्धनुर्धन्विनां वरः । तं मुमोच महाबाणं लवणस्य महोरसि ॥

धन्विनां — வில்லாளிகளுக்குள்
वरः — சிறந்தவராகிய
सः — அவர்
तत् — அந்த
धनुः — கோதண்டத்தை
अथ — அப்பொழுது
आकर्णात् विकृष्य — காதளவு இழுத்து
तं — அந்த
महाबाणं — மஹாபாணத்தை
लवणस्य — லவணனது
महोरसि — அகன்ற மார்பில்
मुमोच — விடுத்தார்.

उरस्तस्य विदीर्याशु प्रविवेश रसातलम् ॥ ३५ ॥

आशु — தட்சணமே
तस्य — அவனது
उरः — மார்பை
विदीर्य — சேதித்துப்பிளந்து விட்டு
रसातलं — (கீழுலகங்களில் நான்காவது உலகமாகிய) ரஸாதலத்தில்
प्रविवेश — புகுந்தது.

गत्वा रसातलं दिव्यः शरो विबुधपूजितः । पुनरेवागमत्तूर्णमिक्ष्वाकुकुलनन्दनम् ॥ ३६ ॥

विबुधपूजितः — ஞானவான்களால் புகழப்பெற்றதும்
दिव्यः — தெய்வத்தன்மைகொண்டதுமான
शरः — சரம்
रसातलं — ரஸாதலத்தை
गत्वा — கிட்டிவிட்டு
पुनः एव — மீளவும்
तूर्णं — சடக்கென
इक्ष्वाकुकुलनन्दनं — இக்ஷ்வாகுகுலநந்தனரிடம் (சத்துருக்கினரிடம்)
आगमत् — வந்துசேர்ந்தது.

शत्रुघ्नशरनिर्भिन्नो लवणः स निशाचरः । पपात सहसा भूमौ वज्राहत इवाचलः ॥३७॥

शत्रुघ्नशरनिर्भिन्नः	சத்துருக்கினரது சரத்தால் பிளவுண்ட	वज्राहतः	வஜ்ராயுதத்தினால்
		अचलः इव	மலையென [அடியுண்ட
सः	அந்த	सहसा	சடக்கென
निशाचरः	நிசாசரனுகிய	भूमौ	தரையில்
लवणः	லவணன்	पपात	வீழ்ந்துமாண்டான்.

तच्च शूलं महत्तेन हते लवणराक्षसे । पश्यतां सर्वदेवानां रुद्रस्य वशमन्वगात् ॥ ३८ ॥

तेन	அவரால்	सर्वदेवानां	தேவர்கள் எல்லோரு டைய
लवणराक्षसे	லவணுசுரன்		
हते च	மாண்டதுமே	पश्यतां	பிரத்தியக்ஷத்தில்
तत्	அந்த	रुद्रस्य	சிவபெருமானது
महत्	மஹத்தான	वशं	ஸன்னதிக்கு
शूलं	சூலமானது	अन्वगात्	போய்ச்சேர்ந்தது.

एकेषुपातेन भृशं निपात्य लोकत्रयस्यापि रघुप्रवीरः ।
विनिर्दहन्नुत्तमचापबाणस्तमः प्रणुद्येव सहस्ररश्मिः ॥ ३९ ॥

उत्तमचापबाणः	உத்தமமான வில்லையும் அம்பையுமுடைய	निपात्य	கொன்று தள்ளிவிட்டு
		लोकत्रयस्य अपि	மூவுலகுக்கும்
रघुप्रवीरः	ரகுத்தமர் (சத்ருக்னர்)	तमः	இருளை
एकेषुपातेन	ஒரே பாணத்தைப்பிரயோகித்ததாலே	प्रणुद्य	போக்கிவிடும்
		सहस्ररश्मिः इव	ஸஹஸ்ரகிரணசூரிய பகவானென
भृशं	எதற்கும் மேம்பட்டதாயிருக்கும்வண்ணமாய்	विनिर्दहौ	விளங்கினர்.

ततो हि देवा ऋषिपन्नगाश्च प्रपूजिरे ह्यप्सरसश्च सर्वाः ।
दिष्ट्या जयो दाशरथेरवाप्तो लोकाश्च सर्वे प्रवदन्ति तुष्टाः ॥ ४० ॥

ततः	அக்காலத்தில்	लोकाः	உலகத்தவர்கள்
देवाः हि	தேவர்களும்	सर्वे च	எல்லோருமே
ऋषिपन्नगाः च	ரிஷிகளும் பன்னகர்களும்	दाशरथेः	சத்ருக்னருக்கு
		जयः अवाप्तः	வெற்றி ப்ராப்தமா
अप्सरसः च	அப்ஸரஸுகளுமாகிய	दिष्ट्या	பாக்யமென [னது
सर्वाः हि	எல்லோருமே	तुष्टाः	உள்ளங்களித்தவர்களாய்
प्रपूजिरे	ஒரு நல்லகாரியம் முடிந்ததென எண்ணிக்கொண்டார்கள்.	प्रवदन्ति	ஒருவரோடொருவர் பேசிக்கொண்டார்கள்.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
उत्तरकाण्डे एकोनसप्ततितमः सर्गः ॥

आदितः श्लोकाः 23080 उत्तरकाण्डे आदितः श्लोकाः 2356

सप्ततितमः सर्गः—எழுபதாவது ஸர்க்கம். ॥ ७० ॥

मधुपुर्यां प्रजापालनम्—மதுபுரியில் அரசாளுவது.

हते तु लवणे देवाः सेन्द्राः साग्निपुरोगमाः। ऊचुः सुमधुरां वाणीं शत्रुघ्नं शत्रुतापनम् ॥

लवणे	லவணன்	शत्रुतापनं	சத்ருக்களைக்கதறி அடிக்கும்
हते तु	வதையுண்டபின்னர்	शत्रुघ्नं	சத்ருக்னரைப் பார்த்
साग्निपुरोगमाः	அக்னிபகவானைத்தலை மையாயுடையவர்களும்	वाणीं	இந்த மொழியை [து
सेन्द्राः	இந்திரனோடிருந்தவர்	सुमधुरां	மிக மதுரமாய்
देवाः	தேவர்கள் [களும்	ऊचुः	கூறினர்கள்:

दिष्ट्या ते विजयो वत्स दिष्ट्या लवणराक्षसः। हतः पुरुषशार्दूल वरं वरय सुव्रत ॥ २ ॥

सुव्रत	"ஹே புண்யாத்மா!	लवणराक्षसः	லவணசுரன்
पुरुषशार्दूल	ஹே புருஷோத்தம!	हतः	மாண்டது
वत्स	ஹே வத்ஸ!	दिष्ट्या	எங்கள் பாக்யவிசே ஷம்.
ते	உனக்கு		
विजयः	வெற்றி உண்டானது	वरं	வேண்டுமென்கிற வர
दिष्ट्या	தெய்வஸங்கல்பம்.	वरय	கேட்பாயாக. [த்தை

वरदास्तु महाबाहो सर्व एव समागताः। विजयाकाङ्क्षिणस्तुभ्यममोघं दर्शनं हि नः ॥३॥

महाबाहो	"ஹே மஹாபாஹோ!	अमोघं	வீணய்ப் போக வில்லை
तुभ्यं	உனக்கு	हि	என்கிறபடியால்
विजयाकांक्षिणः	வெற்றியைப்பிரார்த்தித்துக்கொண்டிருந்தோம்.	सर्वे एव	நாங்கள் எல்லோரும்
		तु	இவ்விஷயத்தில்
		वरदाः	வாமலிக்கிறதாய்
नः	எங்களது	समागताः	இங்கு வந்திருக்கி றோம்."
दर्शनं	பிரார்த்தனை		

देवानां भाषितं श्रुत्वा शूरो मूर्ध्नि कृताञ्जलिः। प्रत्युवाच महाबाहुः शत्रुघ्नः प्रयतात्मवान्॥

प्रयतात्मवान्	கொண்ட முயற்சியை கைவிடாதமுடிக்க வல்ல	भाषितं	திருவாக்குக்கு
		श्रुत्वा	செவிசாய்த்து
		मूर्ध्नि	முடிமீது
महाबाहुः	மகாபராக்கிரம	कृताञ्जलिः	கைகூப்பிவைத்துக் கொண்டு
शूरः	சூரராகிய		
शत्रुघ्नः	சத்ருக்கினர்	प्रत्युवाच	இப்படிவேண்டிக் கொண்டார்:
देवानां	தேவர்களுடைய		

इयं मधुपुरी रम्या मधुरा देवनिर्मिता । निवेशं प्राप्नुयाच्छीघ्रमेष मेऽस्तु वरः परः ॥५॥

मधुरा	"மதுரையெனப் பெயர்கொண்டதும்
रम्या	ரமணீயமாய்
देवनिर्मिता	தேவர்களால் நிருமிக்கப்பட்டதுமான
इयं मधुपुरी	இந்த மதுபுரியானது
शीघ्रं	இப்போதே
निवेशं	ஜனஸஞ்சாரத்தை
प्राप्नुयात्	அடையவேண்டும்.
एषः	இந்த
वरः	வரமொன்றே
मे	எனக்கு
परः	ஸர்வமுமாக
अस्तु	இருக்கட்டும் "

तं देवाः प्रीतमनसो बाढमित्येव राघवम् । भविष्यति पुरी रम्या शूरसेना न संशयः ॥

देवाः	தேவர்கள்
प्रीतमनसः	மனஸந்துஷ்டிகொண்
तं	அந்த [டவர்களாகி
राघवं	ராகவரை (சத்ருக்கி னரை)ப் பார்த்து
बाढं एव	" அப்படியே ஆகும்.
पुरी च	புரியானது
शूरसेना	சூரசேனை வீரர்களால் நிறையப்பெற்று
रम्या	மனோஹரமாயும்
भविष्यति	ஆகும்.
न संशयः	இதற்கையமில்லை"
इति	என்றார்கள்.

ते तथोक्त्वा महात्मानो दिवमारुरुहुस्तदा । शत्रुघ्नोऽपि महातेजास्तां सेनां समुपानयत् ॥

तदा	அப்பொழுது
ते	அந்த
महात्मानः	மஹாத்மாக்கள்
तथा	அவ்வண்ணம்
उक्त्वा	சொல்லிவிட்டு;
दिवं	விண்ணுலகத்திற்கு
आरुरुहुः	போய்ச்சேர்ந்தார்கள்.
महातेजाः	மஹாதேஜஸ்வியான
शत्रुघ्नः अपि	சத்ருக்னரும்
तां सेनां	அந்தச் சேனையை
समुपानयत्	வந்துசேர நியமித்தருளினர்.

सा सेना शीघ्रमागच्छच्छ्रुत्वा शत्रुघ्नशासनम् । निवेशनं च शत्रुघ्नः श्रावणेन समारभत् ॥

सा	அந்த
सेना	சேனை
शत्रुघ्नशासनं	சத்ருக்னரது ஆக்கினையை
श्रुत्वा	சிரமேற்கொண்டு
शीघ्रं	உடனே
आगच्छत्	வந்துசேர்ந்தது.
शत्रुघ्नः	சத்ருக்னர்
श्रावणेन	சிராவணமாஸத்தில்
निवेशनं च	நகரப்பிரவேசத்தையும்
समारभत्	செய்தருளினர்.

सा पुरा दिव्यसङ्काशा वर्षे द्वादशमे शुभे । निविष्टा शूरसेनानां विषयश्चाकुतोभयः ॥

पुरा	பூர்வம்
द्वादशमे	பன்னிரண்டு
वर्षे	ஆண்டுகளுக்கு முன்னர்
शुभे	பாக்கியவிஷயத்தில்
दिव्यसङ्काशा	தெய்வத்தன்மைக்கு ஸமானமான
सा	அது
शूरसेनानां	சூரசேனர்களுக்கு
निविष्टा	வாஸஸ்தானமான
विषयः च	தேசமெல்லாமும்
अकुतोभयः	எப்படிப்பட்ட பயத்திற்கும் நிவாரணமாய் விளங்கிற்று.

क्षेत्राणि सस्ययुक्तानि काले वर्षति वासवः । अरोगवीरपुरुषा शत्रुघ्नभुजपालिता ॥१०॥
अर्धचन्द्रप्रतीकाशा यमुनातीरशोभिता । शोभिता गृहमुख्यैश्च चत्वरापणवीथिकैः ॥
चातुर्वर्ण्यसमायुक्ता नानावाणिज्यशोभिता ॥ ११ ॥

क्षेत्राणि	நிலங்கள்	यमुनातीर-शोभिता	யமுனைதீரத்தில் அழகுவாய்ந்து விளங்குகிறதாய்
सस्ययुक्तानि	தானியப்பெருக்குற்றதாயின.	गृहमुख्यैः	பெரும் மாளிகைகளாலும்
वासवः	வாஸவன்	चत्वरापण-वीथिकैः च	வீதிகள் சந்திக்குமிடங்களாலும்
काले	காலம் தவறாது	शोभिता	அழகுற்றதாய்
वर्षति	மழைபொழியச் செய்தான்.	चातुर्वर्ण्यसमायुक्ता	வர்ணச்ரமநிலை தவறாததாய்
शत्रुघ्नभुजपालिता	சத்ருக்னனால் காப்பாற்றப்பட்ட நகரம்	नानावाणिज्य-शोभिता	பற்பல விலைப்பண்டங்களாலும் அழகுவாய்ந்து விளங்கிற்று.
अरोगवीरपुरुषा	அரோகவீரபுருஷர் களையுடையதாய்		
अर्धचन्द्रप्रतीकाशा	அர்த்தசந்திராகாரமாய் அமைக்கப்பட்ட		

यच्च तेन पुरा शुभ्रं लवणेन कृतं महत् । तच्छोभयति शत्रुघ्नो नानावर्णोपशोभितम् ॥

पुरा	பூர்வம்	शत्रुघ्नः	சத்ருக்னர்
तेन	அந்த	महत् शुभ्रं	அதி சுப்ரமாயும்
लवणेन	லவணனால்	नानावर्णोपशोभितं	எல்லாவிதத்திலுமழகுவாய்ந்ததாயும்
यत्	எது	शोभयति	அமைத்துவைக்கலானர்.
कृतं च	பாழாய்க் கிடந்ததோ		
तत्	அதை		

आरामैश्च विहारैश्च शोभमानां समन्ततः । शोभितां शोभनीयैश्च तथान्यैर्देवमानुषैः ॥१३॥
तां पुरीं दिव्यसङ्काशां नानापण्योपशोभिताम् । नानादेशागतैश्चापि वणिग्भिरुपशोभिताम्॥
तां समृद्धां समृद्धार्थः शत्रुघ्नो भरतानुजः । निरीक्ष्य परमप्रीतः परं हर्षमुपागमत् ॥१५॥

परमप्रीतः	அத்யந்த ஆஸக்தியுடன்	समृद्धां	செழுமையாகிய
समृद्धार्थः	செழுமையைக்கோரிக்கொண்டிருந்த	नानापण्योप-शोभितां अपि	பல விலைப்பண்டங்களால் அழகுவாய்ந்து விளங்குகிறதாயும்
भरतानुजः	பரதானுஜரான	समन्ततः	எங்கும்
शत्रुघ्नः	சத்ருக்னர்	आरामैः च	சோலைகளாலும்
तां	அந்த	विहारैः च	உத்யானவனங்களாலும்
पुरीं	புரியை	शोभमानां	அழகாய் விளங்குகிறதாயும்
तां	அந்த		
दिव्यसङ्काशां	தெய்வத்தன்மை போன்றதான		

तथा	அவ்வண்ணமே
अन्यैः	மற்ற
शोभनीयैः	புண்யாத்மாக்களாய்
देवमानुषैः च	போற்றிக்கொண்டாடத்தக்க மானிடர்களாலும்
शोभितां	அழகாயிருக்கிறதாயும்
नानादेशागतैः	பலதேசங்களிலிருந்து வந்து குடியேறிய
वणिग्भिः च	வியாபாரிகளாலும்
उपशोभितां	மனோஹரமாயிருக்கிற
निरीक्ष्य	கண்டு [தாயும்
परं	பரம
हर्षं	ஆனந்தத்தை
उपागमत्	அடைந்தார்.

तस्य बुद्धिः समुत्पन्ना निवेश्य मधुरां पुरीम्। रामपादौ निरीक्षेऽहं वर्षे द्वादश आगते ॥

मधुरां	மதுரா
पुरीं	நகரை
निवेश्य	ஸ்தாபித்து
द्वादशे	பன்னிரண்டு
वर्षे	ஆண்டுகள்
आगते	கழியவும்
अहं	'நான்
रामपादौ	ஸ்ரீராமரது திருவடிகளை
निरीक्षे	இப்போதே தரிசிக்க வேண்டு'மென்கிற
बुद्धिः	எண்ணம்
तस्य	அவருக்கு
समुत्पन्ना	உண்டாயிற்று.

इत्यार्षे श्रीमद्रामायणे वाल्मीकीये आदिकाव्ये
उत्तरकाण्डे सप्ततितमः सर्गः ॥

आदितः श्लोकाः 23096 उत्तरकाण्डे आदितः श्लोकाः 2372



एकसप्ततितमः सर्गः—எழுபத்தோராவது ஸர்க்கம். ॥ ७१ ॥

वाल्मीकिना शत्रुघ्नप्रशंसनम्—வால்மீகிமுனிவர் சத்ருக்கினரை புகழ்வது.

ततो द्वादशमे वर्षे शत्रुघ्नो रामपालिताम्। अयोध्यां चकमे गन्तुमल्पभृत्यबलानुगः ॥१॥

द्वादशमे	பன்னிரண்டாவது
वर्षे	வத்ஸரத்திலே
शत्रुघ्नः	சத்ருக்கினர்
ततः	அங்கிருந்து
रामपालितां	ஸ்ரீராமரால் பரிபாலிக்கப்பட்ட
अयोध्यां	அயோத்திக்கு
अल्पभृत्य-बलानुगः	ஸ்வல்பம் பிருத்தியர்களையும், சேனையையும் கூட்டிக்கொண்டு
गन्तुं	போக
चकमे	யத்தனப்பட்டார்.

ततो मन्त्रिपुरोगांश्च बलमुख्यान्निवर्त्य च। जगाम हयमुख्यैश्च रथानां च शतेन सः ॥२॥

सः	அவர்
मन्त्रिपुरोगान् च	மந்திரிப்பிரதானிகளையும்
बलमुख्यान् च	சேனைத்தலைவர்களையும்
ततः	அவ்விடத்திலேயே
निवर्त्य	திருத்திவிட்டு
हयमुख्यैः च	குதிரைகளில் சிறந்த வைகளோடும்
रथानां	ரதங்களில்
शतेन च	நூறோடும்
जगाम	பிரயாணமானார்.

स गत्वा गणितान्वासान्सप्ताष्टौ रघुनन्दनः । वाल्मीक्याश्रममागत्य वासं चक्रे महायशाः॥

सः	அந்த	वासान्	இடங்களில்
महायशाः	மஹாயசஸ்வியான	गत्वा	தங்கிவிட்டு
रघुनन्दनः	சத்ருக்கினர்	वाल्मीक्याश्रमं	வால்மீகிமுனிவரின் ஆச்ரமத்திற்கு
गणितान्	உத்தேசித்திருந்த வண்ணமே	आगत्य	வந்துசேர்ந்து
सप्ताष्टौ	ஏழெட்டு	वासं चक्रे	ஒரு இரவு தங்கினார்.

सोऽभिवाद्य ततः पादौ वाल्मीकेः पुरुषर्षभः। पाद्यमर्घ्यं तथाऽऽतिथ्यं जग्राह मुनिहस्ततः॥

सः पुरुषर्षभः	அந்த புருஷோத்தமர்	मुनिहस्ततः	முனிவர் கையினின்று
ततः	அப்பொழுது	पाद्यं	பாத்தியத்தையும்
वाल्मीकेः	வால்மீகிமுனிவரது	अर्घ्यं	அர்க்கியத்தையும்
पादौ	திருவடிகளில்	आतिथ्यं तथा	அதிதிபூஜையையும்
अभिवाद्य	விழுந்து தண்டன் ஸமர்ப்பித்து	जग्राह	பெற்றுக்கொண்டார்.

बहुरूपाः सुमधुराः कथास्तत्र सहस्रशः। कथयामास स मुनिः शत्रुघ्नाय महात्मने॥ ५ ॥

सः	அந்த	सुमधुराः	இனிய
मुनिः	முனிவர்	बहुरूपाः	பலவிஷயங்களைப்
महात्मने	மஹாத்மாவாகிய	कथाः	கதைகளை [பற்றிய
शत्रुघ्नाय	சத்ருக்கினருக்கு	तत्र	அப்பொழுது
सहस्रशः	அனேக	कथयामास	சொன்னார்.

उवाच च मुनिर्वाक्यं लवणस्य वधाश्रितम् । सुदुष्करं कृतं कर्म लवणं निघ्नता त्वया ॥

मुनिः	முனிவர்	निघ्नता	மரணமேற்படுத்திய
लवणस्य	லவணனுடைய	त्वया	உன்னால்
वधाश्रितं	வதையைப்பற்றிய தான	सुदुष्करं	எவராலும் செய்து முடித்தற்கரிய
वाक्यं च	இந்த வாக்கியத்தை	कर्म	பெரியகாரியமான து
उवाच	சொன்னார் : [யும்	कृतम्	செய்துமுடிக்கப் பட்டது.
लवणं	"லவணனுக்கு		

बहवः पार्थिवाः सौम्य हताः सबलवाहनाः । लवणेन महाबाहो युध्यमाना दुरात्मना ॥

सौम्य	"ஹே சௌம்ய!	बहवः	பல
महाबाहो	ஹே மஹாபாகோ!	पार्थिवाः	மன்னர்கள்
दुरात्मना	துராத்மாவான	सबलवाहनाः	சேனைகளோடும் வாஹனங்களோடும்
लवणेन	லவணனுடனே		
युध्यमानाः	போர்செய்த	हताः	மடிந்தார்கள்.

